கலாநிலயம்

v 6 no. 4 26 [illegible] 1933


JL
[illegible]211, N28KN
N33·6·4.
18137

223

223

12 APR 1933

KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6.] 1933 ஹு ஜனவரி மீ 26உ [No. 4

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 61
2. வாழி தோழி (ஓர் கார் நாடகம்) P. இராமாநுஜன் 63
3. தேவகி (ஓர் நாவல்) K. இராஜகோபாலன் 65
4. யாப்பிலக்கணம்—தொடை வித்துவான் M. V. வேணுகோபாலப்பிள்ளை 66
5. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 5-ம் தசகம்) K. இராஜகோபாலாசாரியார் B.A.B.L. 67
6. தமிழ்ப்பாடம் (நளவெண்பா - கலிநீங்குகாண்டம்) 68
7. அப்பர் (64 கலைகள்—வியாகரணம்) E. N. தணிகாசல முதலியார் B.A.B.L. 71
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 73
9. காற்று மழை (அங்கம் 1. களம் 2) (Shakespeare's Tempest) 75
10. பொதிகை நிகண்டு (ஆகாரவருக்கம்) S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 76
11. வர்த்தமானம் 79

## கலாநிலயம்

### சொன்னால் விரோதம் 3.

189137

அறனல்லவும் அநீதியும் புரிவது மக்கள் இயற்கையன்று. புகழேந்திப்புலவர் மிகநுட்பமாய்க் காட்டியபடி, "காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல், இவைகண்டாய், செம்மை நினையாமை பூண்டார் நெறி" ஆதலின், அதனை, மக்களே போல்வார் இயற்கை என, வேண்டுமெனின், ஒருவாறு உரைக்கலாம். மற்று, திருவள்ளுவர்தம் சொற்றொடர்க்குள் ஒளியாமல், வெளிப்பட நின்று, அதனை, கயவர் இயற்கை என்றழைத்தாலும் பிழையில்லை. இதனையே மாற்றிச் சொல்லுங்கால், தீமை என்னுந் தலைப்பின்கீழ் வரத்தகுவனவற்றிற்கு உடன்படுபவர் மக்களோ அல்லர், என்று எதிர்மறை முறையில் இலக்கணமெடுத்துக் கூறுதல் ஏற்புடைத்தாகும்.

இதுவரையில், சொன்னால் ஒருவருக்கும் விரோதம் இல்லை. எனினும், மெய்க்கல்வியில்லாதார் கோட்டியுள், சீர்திருத்தங்கள் என்றவோர் பெயர்படைத்து நடைபெறுகின்ற இயக்கங்கள் பலவற்றுள் ஒன்றுகிலும், இவ்வேறுபாட்டின் உண்மையை உணர்ந்திருக்கக் காண்கிலம். கயவர் கொடுமைசெய்வார் என்பதற்கும் மனிதர் கொடுமைசெய்வார் என்பதற்கும் உயிர்நிலையாய பேதம் உளது. மனிதரே கொடுமையுந் தீமையும்செய்பவர் என்ற எண்ணத்தை அடிப்படையாக வைத்துத் துவக்குவதெல்லாம், காவலும் கட்டளைகளும் கடிதமைக்கும் முயற்சியைக்கொண்டு முடிதல்வேண்டும். கொடுமையை அவர் செய்ய நினையாமையைச் சாதிப்பதற்கு ஏதேனும் வழியுளதோ என்றவொரு எண்ணம் எழுவதின்றி, கொடுமைகளை அவர் செய்யமாட்டாமைக்கு ஏற்றசாதனங்களைத் தேடித்தேடி அமைக்கப்புகுவார். அறனற்றகொடுமைகளைக்கண்ணுற்றவளவில், "மாநுட இயற்கை இருக்குமாறு இவ்வாறு" என்றவொரு அவலக்கொள்கை நமது எண்ணங்களுக்குள்ளே வந்து குடிப்புகுந்தால், அவ்வியற்கையை மாற்றுதற்கு முயலவேண்டும் என்றேனும், முயன்றாலும் இயலுமென்றேனும் சிந்தனை பிறப்பது மிக அரிது. மாநுட இயற்கை தீமைக்கு இணங்குந் தன்மையது, என்று கொண்டக்கால், மனிதர் மனிதரா யிருக்கும்வரையில், மனிதர்கள் தீமைகள்தாம் செய்வார்களென்ற முடிவினை மேற்கொண்டு ஒருவர் மற்றவருக்குத் தீமை செய்யமாட்டாமல் தடுக்கவோ, அல்லது செய்த தீமைக்கு ஈடுசெய்யவோ வேண்டிய முறைகளைத் தேடித்தேடி, வீணே அமைப்பதோன்றும்பயன்படாமையுடன் நில்லாமல், அம்முறைகளே புதிய தீமைகளுக்கு இடமாவதையுங்கண்டு திகைக்கவுந் தெரியாத மதியினராய்த் தீர்வதே சீர்திருத்தகாரர்தம் கடன். அரசியல் அமைப்புக்களையும் சட்டதிட்டங்களையும் ஆதாரமாய்ப் பற்றிக்கொள்ளப் பேதுறுகின்றனர். வேலியேபயிரைமேய ஆரம்பிக்கின்றது. "இனி, இந்தத் தீமைக்கு என்னஉத்தரம் சொல்கின்றீர்" என்று அவர்களைக்கேட்டால், "ஆம், அறிவோம், ஆயினும், அரசாங்கமும் சட்டங்களும் இன்றியமையாத் தீமைகள் (necessary evils)" என்று நாண

யின்றி எதிருரைப்பர். மனிதர் தீயரா யிருக்கவேண்டியதும் இன்றியமையாததாம், அதனைத் தடுப்பதற்கென்று அமைக்கப்படுகின்ற முறைகளும் தீமைகளாயிருக்கவேண்டியதும் இன்றியமையாததாம்—நன்று, உய்ந்தது போ இவ்வுலகம்!

இதற்கெதிர், கயவர்களே கொடுமை செய்கின்றனர் என்பதையும், அன்னவர் மாநுடப் போலிகளே என்பதையும் கருத்துட்கொண்டு விவகரித்தால் விளையுஞ் செய்தி முற்றிலும் வேறாகிவிடும். அப்பொழுது, மனிதர் கயவராகத்தாம் இருக்கவேண்டும் என்றேனும், மற்று, கயவர்தாமும் கயவரே யாகத்தான் இருக்கவேண்டும் என்றேனும் நியதி கூற இயலாதன்றோ! இதற்குமாறாக, "ஏன் இவர் கயவராக இருக்கின்றனர்" என்னுங் கேள்வியே பிறக்கும். கொடுமை செய்யமாட்டாமல் மனிதரைத் தடுப்பது எப்படி எப்படி என்று தடுமாறுவதை விட்டு, கயமை நீங்கி, கொடுமைகள் நினைக்க மாட்டாமைக்கு இயைந்தவழி யாதென முயலத் தலைப்படுவார். "சான்றோன் ஒருவன் இருக்கும் வண்ணம், மாநுட இனத்தவரனைவரும் ஏன் இருக்கலாகாது?" என்று ஷேல்லியுடன் சேர்ந்து ஊக்கமுடன் சிந்திப்பார். ஹரிபாபாவைப்போல், கள்வனுக்குத் தம் கைப்பொருள் அனைத்தையும் உவந்தளித்து உதவிசெய்வார். மனிதரே கயவரென்று மயங்குவதற்கும் கயவரை மனிதராக்க முயல்வதற்கும் இடையே கிடக்கும் வேற்றுமை இது. இவ்வேற்றுமைக் கிணங்கிச் 'சீர்திருத்தங்கள்' செய்ய முயல்வதற்குப் பெரியதோர் இடையூறுளது. ஏனெனில், சீர்திருத்தகாரர்கள் தாமே முதலில் மனிதர்களாயிருக்க வேண்டுமென்பது ஐயமற நிற்குமோர் அவசியம். கயவர்க்கும் மனிதர்க்கும் இடைப்புகுந்து இயங்குமம் மயக்கம் தெளிவதன்முன் இவ் வவசியத்தின் அருமையை அறிவதெங்ஙனம். அறிந்தாலும் அவ்வறிவிற் கேற்றபடி ஒழுகுதற்கு வேண்டிய கல்விப்பதமும் மனதின் பயிற்சியும் அடையவேண்டுமே. இப்பயிற்சி எளியதேனும், அதனாற் பேரும் புகழும் பெறுவதில்லையாதலின், அவையனைத்தும் வீணென மதிக்கப் படுகின்றன. கோயிற் கதவை வேறோர் இனத்தவர்க்குத் திறக்கச் சொன்னால் புகழ் பெருகும்; தன் வீட்டுக் கதவைத் தன் இனத்தவர்க்கு அடைத்து வைத்தால் என்?—இது மாநுட இயற்கை யென்னும் அமைதியில் ஒருவருக்கும் பரிபவமின்றி யடங்கி விடாதோ.

சிலதினங்களுக்குமுன்னர் நாம் ஓர் நண்பர் வீட்டிற்குச் சென்று உரையாடிக்கொண்டிருந்தபோது, எண்பது வயதடைந்த ஓர் முதியோர் நீராடி, வெள்ளை ஆடையுடுத்து, திருமண் திகழும் முகத்தினராய் வாயிற்படியண்டை வந்து, "ஐயா, ஐயா"வென அழைக்க, எமது நண்பர் அவரை 'வாரும்' என உள்வரக் கூப்பிட்டு, "யாதுவேண்டும்" என வினவியதற்கு, "நான் காஞ்சீபுரம், இந்தத் தெருவின் கோடியில் இருக்கும் ஓர் வைத்தியரிடம் மருந்து வாங்கிக்கொண்டு உடனே ஊருக்குத் திரும்பிவிடலாம் என்று வந்தேன். மூன்று நாட்கள் என் உடல்நிலையைச் சோதித்த பிறகே மருந்து கொடுக்க இயலும் என்றும், அதுவரையில் நானிங்குத் தங்கியிருக்கவேண்டுமென்றும் கூறுகின்றார். நான், "ஹோட்டலில்" சாப்பிடுகின்ற வழக்கமில்லை, ஆகையால் நீர் இந்த வொரு வேளைமாத்திரம் உணவு அளிப்பீர்களோ" என்று கேட்டார். அதற்கு எம் நண்பர், "ஆகா, அதற்கென்ன, நான் உணவு கொள்ள வருவதற்குச் சிறிது நேரமாகும். நீங்கள் பசித்திருக்கின்றீர்" என்று சொல்லி அவரை உள்ளழைத்துச்சென்று, தம் மனைவியை அழைத்து அவருக்கு உணவிடும்படிசொல்லித் திரும்பினார். பிறகு, உணவருந்திய அம்முதியவர் கூடத்திற்கு வந்து வெற்றிலைபாக்கு வாங்கிக்கொண்டு எம் நண்பரிடம் விடைபெற்றுப்போனவர் வாயிற்படியண்டை சென்றதும் மீண்டுவந்து, "ஐயா, நான் இவ்வூரில் மூன்றுநாட்கள் இருக்க நேர்கின்றது. நீங்கள் நல்லவராக இருக்கின்றீர். இன்னும் இரண்டு நாளும் நீங்கள் எனக்கு உணவு கொடுப்பீரோ. உங்களுக்குக் கஷ்டமாயிருக்குமாயின் வேண்டா. நான் உங்கள் வீட்டை அடைவதன்முன் இந்தத் தெருவில் வேறு பல வீடுகளுக்குள் நுழைந்து உணவு கேட்டேன். தாம் சாப்பிட்டாய் விட்டது என்று சிலரும், சாப்பிட நேரமாகும் என்று சிலரும், 'சவுகரியமில்லை' என்று சிலரும், "வேறு வீட்டிலே போய்ப் பாரும்" என்று சிலரும் என்னை அனுப்பிவிட்டனர். நான் இரவிற் சாப்பிடுவதில்லை, பகல் ஒரு வேளை தான் சாப்பிடுவது. ஆகையால் நாளைக்கும் அதற்கு மறுநாளும், நீங்கள் பகல் ஒருபொழுது உணவளிக்க மனங்கொள்வீராயின்............" என்று பயந்து பயந்து மெல்லக் கேட்டனர். எமது நண்பர், "ஆகா, அதற்கென்ன, அவ்வாறே வந்து உணவருந்திப் போங்கள்" என்று கூறவும், அம்முதியோர், மீண்டும் விடைகொண்டு வாயிற்படிகாறும் சென்றவர் மற்றுமோர் முறை திரும்பி வந்து, "ஐயா, நீங்கள் நிரம்ப நல்லவராக இருக்கின்றீர். இரண்டு வேளையும் உணவு வேண்டுமென்றால் ஒருகால் முற்றிலும் மறுத்துவிடுவீரோ என்றஞ்சி, இரவில் நான் சாப்பிடும் வழக்கம் இல்லையென்று நான் முன்னே பொய்சொன்னேன். இரவில் பட்டினியாய்ப் படுத்தால் எனக்குத் தூக்கம் வராது. ஆகையால் தயவுசெய்து இரவிலும் எனக்கு அன்னமிட மனங்கொள்வீரோ" என்றனர். இதற்கும் எமது நண்பர், "ஆகா, அதற்கென்ன, அவ்வாறே செய்யுங்கள்" என்று சொல்லி விடை கொடுத்தார். வாயிற்படி சென்ற முதியோர் இம்முறையுந் திரும்பிவந்து, "ஐயா, இன்னுமொன்று. இரவில் மோர் வார்த்துக்கொண்டால், என் உடம்பிற்கு ஆகாது. நான் பாலுஞ்சாதந்தான் சாப்பிடுவது. ஆகையால், நானே பால்வாங்கிக்கொண்டு வந்துவிடட்டுமோ, அல்லது உங்கள் வீட்டில் கிடைக்குமா" என்றனர். இதற்கும் எமது நண்பர், "ஆகா, அதற்கென்ன, நீங்கள் கைப்பால் வாங்கிக்கொண்டு வருவானேன், நம் வீட்டிலேயே கிடைக்கும்" என்னவே, அம்முதியோர், வாயிற்படி சென்று இன்னுமோர் முறையுந் திரும்பினர். இதுகண்ட எமது நண்பர், "இம்மூன்று நாளும் இவ்வீட்டிலேயே தாம் இருப்பதற்கு அநுமதிகேட்க வருகின்றாரென்று நினைக்கின்றேன். அவர் கேளாமுன்னம் நானே அவரை அழைத்திருக்க வேண்டும். ஏனோ மறந்துபோயினேன்" என்று எமக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில் அவர் அணுகி, "ஐயா, என்னை மன்னிக்கவேண்டும். எனக்கு என்னவோ சந்தேகமாக விருக்கின்றது. ஒரு வேளை உணவுகேட்டேன், மூன்றுநாள் கேட்டேன், இரண்டுவேளையுங் கேட்டேன். பிறகு பாலுங் கேட்டேன். எல்லாவற்றிற்கும், ஆகா, அதெற்கென்ன, ஆகா அதெற்கென்ன என்றீர்கள். இது நிசமோ, அல்லது இப்படிக் கேட்கின்றேனே என்று என்னைப் பரிகசம் செய்கின்றீர்களோ தெரியவில்லையே. நான் வயதானவன், பரிகசமாயிருந்தால் இப்பொழுதே சொல்லிவிடுங்கள். இந்தக் காலத்தில் யார் ஐயா..." என்று இயம்பிவருகையில், எமது நண்பர் பரிகசம் ஒன்றுந் தாம் செய்யவில்லை என்று பரிவுடன் அவரைத் தேற்றியனுப்பினர்.

இந்தச் சிறு நிகழ்ச்சியின் விளம்பரம் அதனுள்ளேயே அடங்கியிருக்கின்றது. உணவு கேட்டு வருபவரை மறுத்தனுப்புவதே இயற்கை யென்றும், வேண்டியபடி அளிக்க இசைவது பரிகசமென்றும் கருதும்படி அமைந்திருக்கும் இவ்வாழ்க்கையைத் உயர்த்தத் தகுவன தீண்டாமை யனைய சீர்திருத்த முயற்சிகளல்லவென்பதைச் சொன்னால் விரோதமாயினும் சொல்லாமற் றீரலாமோ!



# வாழி தோழி

[ஓர் கார் நாடகம்]

[46-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 3. களம் 1.

**[தலைமகன் ஊர்க்கருகில் உள்ள இடைவழி]**

*[பாசறையினீங்கித் தன் காதலியின் ஊருக்கு வரும் தலைமகன் பாகனை நோக்கிக் கூறுகின்றான்.]*

**தலைமகன்:—**

சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன—சீர்த்தக்க
செல்வ மழைமதர்க்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு.

[அன்புள்ள பாகனே, நாம் ஊர்க்கருகில் வந்துவிட்டோம்! இதோபார்; நாம்முன்னர் அரசர்பொருட்டுப் போருக்குச்செல்லுங்கால் அரும்பு ஒன்றுவதுஇல்லாமல் இருந்த குளிர்ச்சிமிக்க இம்முல்லைச்செடிகள் எல்லாம் சிச்சிலிப்பறவையின் சிவந்த வாயினது அழகையுடையனவாகி, வரிசை வரிசையாக மலர்ந்திருக்கின்றன! இவற்றைக் கண்டவளவில் என் மனம் மிக்க மகிழ்ச்சியுறுகின்றது; சிறந்த வளப்பமான குளிர்ந்த கண்களையும் சிலவாகிய மொழியினையும் உடைய எனது காதலியின் விருந்தயர்வேன்; அஃதன்றியும், நாம் அடைந்த வெற்றியின்பொருட்டு நமது அரசனது விருந்தினரும் ஆவோம்; ஆதலின் மகிழ்ச்சி நிறைந்த மனத்தொடு தேரைச் செலுத்து.]

### களம் 2.

**[தலைமகள் இல்லம். தலைவி, தோழி, தலைமகன்]**

**தலைவி:**—தோழி, நீ கூறத்தகுவன அனைத்தும் கூறிவிட்டாய்; யானும் பொறுக்குந்துணையும் பொறுத்திருந்தேன்; இனி ஏழைக்கு ஆறுதல் கூற உனக்கு வாயில்லை; பாவம்! நீதான் என்ன செய்வாய்? யான் புரிந்த தீவினைக்கு யான் ஒருத்தியே உரியவள்; இதுகாறும் எவர்பொருட்டு நான் இவ்வுடலைச் சுமந்திருதேனோ, அவர் வாராமையால் இனி இவ்வுடலைப் பொறுத்திருப்பது வீணேயாகும்; எனதன்பிற் குரியாய்! இதுவரை நாம் உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக இனிது வாழ்ந்துவந்தோம்; இறைவன் திருவருள் இதுவரை நம்மை வாழ்வித்தது; இனியும் வாழ்விக்கும்; உயிரனையாய், பேச நாவெழவில்லை; ஏழையேன் அறிந்தோ அறியாமலோ ஏதேனும் தவறுசெய்திருப்பின் அவற்றைநினது பெருந்தன்மையால் மறந்துவிடு; (தோழியின் இரு தோளையும் இறுகத் தழுவிக்கொண்டு) அடிச்சிக்கு விடைகொடு; இப் பாழுடலை மாய்த்துக்கொள்ளப் போகின்றேன்; என்றாவது நம் காதலர் நம்மை நினைந்து இங்கு வருவாராயின், அவரிடத்து எனது கரையற்ற அன்புப் பெருக்கை வெளியிடு; எனது தாழ்மையான வணக்கங்களையும் அவர்க்கு உரிமையாக்கு; ஐயோ! தோழி! நீயாவது இறுதியில் எனக்கு நல்லாசி கூறியனுப்பு" (என்று கூறிக் "கோ" என்று கதறியழுதாள்.)

**தோழி:**—(தலைவியை இறுகத்தழுவி)

கருங்கடல் மேய்ந்த கமஞ்சூ லெழிலி
இருங்க லிறுவரை யேறி யுயிர்க்கும்
பெரும்பதக் காலையும் வாரார்கொல் வேந்தன்
அருந்தொழில் வாய்த்த நமர்.

[அன்னாய், அழாதே, அழாதே; உயிரொன்றாயின் எனது உடல்மட்டும் இம் மண்ணுலகில் தனித்திருக்குமோ? உனக்குமுன்னர் யான் எனது உடலை மாய்த்துக் கொள்வேன்; நம் இருவர்தம் வாழ்க்கையும் இவ்வாறு ஒழியின், அந்தோ! அதன் பின்னர்என்ன நிகழும் என்று நினைக்கவும் என் நெஞ்சு அஞ்சுகின்றது! தற்கொலையால் உயிர்நீத்தோர் இவ்வுலகிற் பலநாள் அலகையாகத் திரிந்து வருந்த நேரிடுமாமே! அது போகட்டும்; நமது உயிரனையார், அன்பிற்கு உறைவிடம், ஆருயிர்க் காதலர், அரசர்பொருட்டுப் போர்த்தொழிலை மேற்கொண்டன்றோ நம்மைப் பிரிந்தனர்; அப்போரோ எளியதன்று; மிக அரியது; அத்தகைய போரில் ஈடுபட்டவர் வெற்றியொடு நலமே மீளவேண்டுமென, இறைவன் திருஅருளுக்கு நாம் தவங்கிடப்பதன்றி அவர்மீது பெருஞ்சினம் பாராட்டித் தற்கொலைபுரிந்துகொண்டால், சென்றவினை முற்றியவுடன் நம்மை நினைந்து காற்றினுங் கடுகி மீண்டு நமது இல்லம் அடைந்ததும், நமது கதியை யறியின் அவர்மனம் அளப்பரிய அருந்துயர் எய்துமே. அதனை ஏழையால் எண்ணவும் இயலவில்லை; நங்காய், கரியகடலின்நீரை யுண்டதனாலாகிய நிறைந்த சூலினையுடைய முகில் பெரிய பாறைக்கற்களையுடைய மலையுச்சியிற் சென்று நீரைச் சொரியும் இச் செவ்விய காலையும் வாராதிருப்பரோ]

**தலைமகள்:**—அன்புடையாய், நின்மொழிகள் என்னை ஆழ்துயரில் வீழ்த்தின; அலகையானால்தான் வருந்த நேரிடுமெனின், மற்று இம் மனிதப் பிறவியில் துன்பந்தான் இல்லையோ? ஆனால் நமதன்பர் மனம் வருந்தப் பொறேன்; தோழி! போரினும் அரிய போரென்றாய்; எத்தகைய போராயினும், அது முடிவுறினும் உறுவிடினும், கார்காலந் தொடங்கியதும் போர் நிறுத்தப்படுமே; நிறுத்தியதும் நம் தலைவர் நம்மை நினைந்து வாராது வேறு எங்குச் செல்வார்? இதனால் இது கார்க்காலம் அன்றெனக் கூறின் நீ 'இது கார்காலமே' என்று வற்புறுத்துகின்றாய்; அங்ஙனமாயின் காதலர் வருகைக்கு நேர்ந்த ஊறு யாதோ? (என்று கண்கலங்கினள்.)

**தோழி:—**

புகர்முகம் பூழிப் புரள வுயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ டியைந்தாடும்
தண்பதக் காலையும் வாரா ரெவன்கொலோ
ஒண்டொடி யூடு நிலை.

[ஒளிபொருந்தியவளையை யணிந்தவளே! 'தலைவர், தலைவர்' என்று அவரையேநினைந்து நீ இங்ஙனம் வருந்துவதுபேதைமை; உயர்ந்ததோற்றத்தையும், கொடிய கோபத்தையும் உடைய ஆண்யானைகள் புள்ளியினையுடைய தம் முகம் புழுதியிற் புரளும்வகை பெண்யானைகளுடன் கூடி விளையாடும், குளிர்ந்த இச்செவ்விய காலத்தும் நம் தலைவர் நம்மைநினைந்து வாராது

மறந்தனர்; அங்ஙனமாக நாம் ஏன் அவரை நினைத்தல்வேண்டும்? நாமும் மறந்து விடுவோமே; இது தான் முறை; இதை விட்டு, நம்மை மறந்த அவரை நாம்மட்டும் நினைந்து வருந்துதல் வீணாகும்.

**தலைமகள்:**—என்ன சொல்கின்றாய், நம் தலைவரை மறந்துவிடு என்றா? நான் மறப்பினும் என் மனமோ மறவேனென்கிறதே; நாவோ 'அவர் ஏன் இன்னும் வரவில்லை' என்றுவினவியவண்ணம்இருக்கின்றது; இந்நிலையளாய ஏழையேன் எங்ஙனம் மறப்பேன்? இஃதிருக்கட்டும்; ஏது உன் மொழிகள் புதுமையை விளைவிக்கின்றன? 'தலைவர் போர்குறித்துச் சென்றிருக்கின்றார்; அது மிக அரிய போர்; அத்தகைய தொழிலில் ஈடுபட்டமையின் அத்தொழில் முடிவுற்றதும் உறுதியாய் வருவார்; ஒருக்காலும் நம்மை மறவார்' என்று, அன்றுமுதல் இதுவரை கூறிவந்த நீ இன்று 'அவர் நம்மை மறந்தார்; நாமும் மறப்போம்' என்று கூறுகின்றனையே? அவர் நம்மை மறந்தார் என்பதை எங்ஙனம் அறிந்தாய்? வீணே அவர்மீது ஏன் பழி சுமத்துவது; அவரும் நம்மை மறப்பரோ? எனக்கு உண்மையைச் சொல்; நெஞ்சு துடிக்கின்றது.]

**தோழி:**—

அலவன்க ணேய்ப்ப வரும்பீன் றவிழ்ந்த
கருங்குர னொச்சிப் பசுந்தழை சூடி
இரும்புன மேர்க்கடி கொண்டார் பெருங்கௌவை
ஆகின்று நம்மூ ரவர்க்கு.

[செல்வி! நானா பழிசுமத்துகின்றேன்? என்மீது இவ்வாறு ஐயுறவும் உன் உள்ளம் ஒருப்பட்டதே! நண்டினது கண்ணினையொப்ப அரும்பினை யீன்று, பின் மலர்ந்த கரிய கொத்தினையுடைய நொச்சியினது பசுமையாகிய தழையைச் சூடி உழவர்கள் பெரிய காடுகளைப் புதிதாக ஏருழுவிக்கத் தொடங்கினார்கள்; இது கார்க்கால மழைபெய்ததும் நன்னாள் குறித்து ஏர் உழுவதென்பதை நீயறிவாய்; ஆதலின் இது கார் காலம் என்பதில் ஐயமில்லை; ஆயினும் நம் தலைவர் இன்னும் வாராததைக் குறித்து, நமது ஊரின்கண் அவர் கூறிய மொழி பொய்த்தனர் என்று பெரிய பழிச்சொல் பரவியுளது; ஆதலின் பழி நான் சுமத்தவில்லை; அவரே தேடிக்கொண்டார்; அத்தகையவரை நாம் மறந்து வாழின் வரும் இழுக்கு என்னவோ?

**தலைமகள்:**—தோழி! நீ கூறியன அனைத்தும் உண்மையேயாயினும் என்னால் அவரை மறக்கவோ இயலவில்லையே! அந்தோ! அவர் நம்மைப் பிரிந்து செல்லுங்கால் என்னென்ன கூறிச் சென்றார்; எவ்வளவு அன்பு காட்டினார்; அவையனைத்தும் பொய்யாமா? அன்பே! நின்னைப்பிரிய இயலவில்லையெனினும் மன்னவர்பொருட்டுச் செல்லவேண்டியுளது; மகிழ்ச்சி நிறைந்த மனதொடு அடியேற்கு விடைகொடு; சென்ற தொழில் முடிவுறாவிடினும் கார்காலத் தொடக்கத்தில் நின்மதிமுகமும் இன்சொல்லும் கண்டுகேட்டுமகிழக் காற்றினும் கடுகி வருவேன்; கார்க்காலம் இதுவென நீ அறிவதற்குச்சிலகுறிகள்கூறுகின்றேன்; - முகில்கள் எண்டிசையும் சூழ்ந்து முழங்கி இனிய நீரைச் சொரியும்; முல்லையும் பிடவமும் குமிழும் மலர்ந்து நறுமணங்கமழும்; வண்டுகள் அவற்றிற்படிந்து இன்னிசைபாடும்; எருமைகள் நீரில் வீழ்ந்து சேற்றை உழக்கிச் செம்மாந்து விளையாடும்; நமது சிற்றூர்க்கு மேற்கே தெரிகிறதே, அந்த மலையில் முகில்கள் தொகுதி தொகுதியாய்த் தங்கும்; அன்றே நின்னைக் கண்டு மகிழும் நன்னாள்! அதுவரை பொறுத்திரு' என்று தன் கண்களில் கலங்கும் நீரை யான் அறியாவாறு முகத்தை மறைத்துக் கனிந்தமொழியிற் கூறிச் சென்றனரே! அத்தகைய என் ஆருயிர்ச் செல்வரை யெவ்வாறு மறப்பேன்? அவர்தானாகட்டும் என்னை யெப்படி மறப்பார்? ஆதலின், அவர்மீது ஊரார் பழிதூற்ற முயல்வது அவர்தம் பேதைமையையே காட்டும்; போர்குறித்துச் சென்ற மற்றவர்கள் இன்னும் வாராதிருக்கையில் நமது அன்பரைமட்டும் பழிக்கு இலக்காக்குவது பேதைமையன்றி வேறென்? நங்காய்! ஊரார் எது வேண்டுமாயினும் கூறட்டும்; அதனால் அவர்க்கொரு குறையிலை; மற்று என்குறை தீர்வது என்றோ? (என்று கூறி முத்துமுத்தாய் நீர் துளிப்ப வருந்தினாள்.)

**[தலைமகன் தேர் தலைவியின் மாளிகையின் முன்றிலை அடைதல்.]**

**தோழி:**—

வந்தன செய்குறி வாரா ரவரென்று
நொந்த வொருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணங் கொண்டன் றெழில்வானம்
நந்துமென் பேதை நுதல்.

[செல்வி! நின் நினைவே மேதக்க நினைவு! இதோ நம் முன்றிலில் தேர் ஒலிபோல் கேட்கின்றது! 'தலைவர் செய்த குறிகள் வந்துவிட்டன; ஆனால் அவர் இன்னும் வரவில்லையே' என்று வருந்திய எளிய பேதைமைக் குணம் வாய்ந்த ஒருத்தியாகிய நினக்கு, நின் துயர்நோய் நீங்கும் மருந்தாகி அழகிய மேகம் ஈந்தின் கனியின் நிறம்போலும் கருநிறத்தைக் கொண்டது! அதனாலன்றோ நம் அன்பர் இப்பொழுதே இங்கு வர நேரிட்டது; இனி நினது நெற்றி அழகுபெற்று விளங்கும்!]

[தலைமகன் தேரினின்றும் இழிந்து மாளிகையுள் நுழைந்து, அங்கே தலைவியும் தோழியும் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ந்து, பாங்கியை விளித்துக் கூறுகின்றான்.]

**தலை மகன்:**—

அன்புடையாய்! நீயன்றோ என்னை வாழ்வித்தனை; என் ஆருயிர்ச் செல்வி, அருமருந்தன்னாள் யான் குறித்த காலத்து வாராது காலந்தாழ்த்தியதால் எளியனைக் குறித்து எவ்வாறு நினைந்து வருந்துகின்றனளோ; 'செல்லாமை யுண்டேல் எனக்குரை, மற்று நின் வல்வரவு வாழ்வார்க்கு உரை' என்ற என்பேதை தான்கூறிய வண்ணமே செய்து விட்டனளோ, என்று பலவாறு ஐயுற்று அலமந்த எளியேனை நீயன்றோ வாழ்வித்தாய்! இதுகாறும் நின் துணை யின்றெனின் அவள்நிலை யென்னாம்? தோழி, நீ வாழி பல்லாண்டு!

முற்றிற்று.

**அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.**



# தேவகி

[47-வது பக்கத் தொடர்ச்சி]

**அசோதை** செய்த பிறர்நலம் பேணுமப் பிரசங்கத்தைக்கேட்ட என் மாமி, "அம்மா, சீக்கிரத்தில் நம் நாடும் முன்னேறும். அடுத்த மாதர்கூட்டத்தில் கலந்து யோசிக்கின்றேன்," என்று முடிக்கையில் கோமளம் தாயினருகோடிவந்தாள். வந்தவளை அன்னை அருமையுடன் அணைத்துக்கொண்டு, 'நமது கோமளம் எப்படி யிருக்கின்றாள்' என்னலும், அசோதை "புலிக்குப் பிறந்தது பூனையாகுமா. பள்ளியிற் கோமளத்தின் திறமையை வியக்காதாரில்லை" என்று இச்சகம் பாடினாள்.

"நீ தலைவியாய் இருக்கையில் கோமளத்திற்கென்ன குறை. அந்தப் பெண்குரங்கைத்தான் சரியே பார்த்துக்கொள்."

"தேவகியா, அதற்கு என்னகேடு பார்த்துக்கொள்வதற்கு. எப்பொழுதும் அழுதகண்ணும் சிந்தியமூக்குந்தான். அழத்தான் அது பிறந்துளது."

"அது செத்துத் தொலையலாகாதா. என் வீட்டை இப்படியா பற்றிக்கொள்ளவேண்டும்" என்று மாமி கூறிக்கொண்டிருக்கையில் என் மாமனும் வந்தார். வந்தவர் அசோதையும் என்மாமியும் இருப்பதுகண்டு, 'என்ன அசோதையம்மாள், நீங்கள் சபிக்கின்ற மந்திரம் முற்றியதா? எந்தவீட்டிற்குப் பந்தம் சூழ்ந்தீர்கள். பெண்மக்கள் முன்னேற்றம் எப்படியிருக்கின்றது? உரிமையின் சமத்தன்மையை அளந்துகாட்டத் தெருவிலே கைகோத்துப் பெண்கள் புறப்பட இன்னும் எத்துணைநாள் செல்லும்" என்று கூறிச் சிரித்தனராய் மேன்மாடி சென்றார். அசோதையும் செத்த முகத்துடன் என் மாமியினிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினாள்.

இந்நிகழ்ச்சியின் மறுதினம் புண்ணியவதி அசோதை பிரம்பொன்றை ஏந்தினளாய் என் வகுப்பினுள் நுழைந்தாள். வந்தவள் முகம் பொசுக்க அவள் கைப்பிரம்பு என் உயிரை வதக்கித் தந்தது. அப்பொழுது எனது வகுப்பில் கணக்குப்பாடம் நடந்துகொண்டிருந்தது. பெருந்தலைத் தேவி, என்னை நோக்கி, 'ஏன் இவ்வளவு மந்தபுத்தியாய் இருக்கின்றாய்', என்றாள்.

"இல்லையம்மா, எல்லாக் கணக்குக்களையும் போட்டுவிட்டேன்" என்றேன்.

"நீ காப்பி அடித்த" சதுரமோ இன்று உன்வாயை நீட்டச்சொல்கின்றது?"என்றனள் அசோதை. இவ்வுரைகேட்ட என் வகுப்பு உபாத்யாயினி 'தேவகி கணக்கில் கெட்டிக்காரி' என்றாள். இந்நிலையில் அசோதை என்ன செய்வாள். என் மாமியின் மனமும் அதனால் தன் வயிறும் குளிரவேண்டுமே; யோசித்தாள். "ஹிந்திப் பாடத்தில் நீ பின்னிருக்கின்றாயாமே," என்றாள்.

"அம்மா நான் ஹிந்தி எடுத்துக்கொள்ளவில்லை. என் மாமனும் வேண்டாவென்றுவிட்டார்."

"ஏ! பிணமே, வாயைமூடு. வாய்நீட்ட எங்குக்கற்றாய். நீட்டுவதும் யாரிடத்தில்—என்னையும் கோமளம் என்று நினைத்தனையோ. ஏன் நீ விஜயனையும் கோமளத்தையும் கண்டு கரிக்கின்றாய். அன்னமிடுகின்ற உன் மாமியின் மக்களிடம் நீ நடந்துகொள்வது இப்படித்தானோ"

இன்னபடி இவள் நேற்றுக் கற்றதைக் கக்குவது காண என்னால் சற்றேனும் பொறுக்கமுடியவில்லை. 'என்னைக் கரிப்பவர் அவர்களே' என்று கூறினேன். ஓநாய்க்கும் ஆட்டுக்குட்டிக்கும் இடைநிகழ்ந்த கதை இன்று என்பால் உண்மையாக நான் மனந்தாளாமல், 'நாதியற்ற நான் நீள்வதற்குரிய வாயைப் பெறவில்லை" என்றுரைத்து, என் விதியை நினைந்தனளாய் அழுது நின்றேன். எதிர்நின்ற அசோதை புலியெனப்பாய்ந்து என் மெய்யும், அவள்கைப் பிரம்பும் உருக்குலையச் செய்து ஆறினாள்.

இது ஒருநாள் நிகழ்ச்சியன்று. விடிகின்ற ஒவ்வொரு நாளும் எனக்கு இவ்விழவிலே தான் விடியும். இது, என் பள்ளிக்கூடத்தில் இருந்தவர் மனத்தை நோகச் செய்தது. என்பால் நெருங்கிய நட்புடைய தோழி கோதைஎன்பவள் இக்கொடுமையைக் காணத்தரியாதவளாய் அசோதையின் கையிலிருந்தபிரம்பைப் பிடுங்கி எறிந்துவிட்டு,என்னையும், மற்றொரு தோழியான குமுதத்தையும் அழைத்துக்கொண்டு வெளியேறினாள்.கோதை அவ்வூர்த் தனவந்தரொருவர் வீட்டுப்பெண். எனவே அவளிடம் அசோதையின் கைப்பிரம்பு நெருங்க அஞ்சும். குமுதமோ அவ்வூர் வைத்தியசாலைத் தலைவர் மகள்.அசோதை தலைநாணியகன்றாள். நாங்களும் குமுதத்தின் வீடுசென்றோம். அவள் தகப்பனார் எனக்கு ஏதோ சிறிது மருந்துகொடுத்தார். அங்கேயே நீண்டநேரம் இருந்துவிட்டு, மாலையில் வீடு போய்ச் சேர்ந்தேன்.

என்மீது நட்புடைய கோதையையும் குமுதத்தையும், என் மாமிமகள் கோமளமோ கண்ணெடுத்தும் பாராள். எளியவர் வீட்டுப் பெண்களோ அசோதைக்கு அஞ்சினராய் எங்களுடன் நெருங்கிப் பழகார். எனது தோழியர், நட்பின் அருமையையும், தாயின் பரிவையும் உலோவாது எனக்கு அருளினர். அன்றன்று நான் வீட்டிலும் பாடசாலையிலும் படும்பாடெல்லாம் அவரிடமேசொல்லி ஆற்றிக்கொள்வேன். பிரம்புக்கடைக்காரனது வியாபாரம் பெருகப்பெருக நான் கல்வி கற்றவண்ணம் இவ்வண்ணம்.

வருடப் பரிட்சை நடந்தது. கோடை விடுமுறை வந்தது. வந்த விடுமுறை என் உடலுக்கே விடுமுறையாயது. மாதம் இரண்டுகழியப் பள்ளியும் திறந்தது. நான் பரிட்சையில் நன்கு தேறி மேல்வகுப்பிற்குச் சென்றேன். கோதையும் குமுதமும் தேறினர். ஆனால் பிறர்வியக்கும் திறமையுடைய கோமளமோ தேறவில்லை. மேல் வகுப்பிற்கு மாறிச்சென்றதால் நான், பட்டபாடு சிறிதன்று. என்னைப் பள்ளியினின்று நிறுத்திவிடவும் என் மாமி முயன்றாள். என் மாமன் இடந்தராமையால் அவளது எண்ணம் நிறைவேறவில்லை. என் மாமன் காட்டும் அருமையும், தையம்மாளின் நல்லுரையும், துணையமைய, மாமி இழைத்த சிறுமையெல்லாம் பொறுத்தவளாய் ஓராண்டைக் கடத்தினேன்.

ஒருநாள் மாலை என் மாமனுக்குக் குளிர்காய்ச்சல் அடித்தது. வாரம் ஒன்றுகடந்தும் அந்தக் காய்ச்சல் நிற்கவில்லை. நான் பாடசாலைக்குப் போகும் வேளை தவிரமற்றவேளைகளில் அவர் அருகிலிருந்து இயன்றது

செய்துவந்தேன். நான் அவர் அருகிலே இருப்பது என் மாமிக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் நான் உண்டி அருந்திக்கொண்டிருக்கையில், அங்குவந்து "பாபி, மருந்திட்டு வசியம்செய்துகொண்டுவிட்டாய்; இன்னும் செய்வதற்கு என்னவைத்திருக்கின்றாயோ. புழுக்கையே, இனி அவரிடம் நீ இருக்கக் கண்டால் உன் குதிகால்நரம்பை எடுத்துவிடுவேன்," எனச் சீறினள். அன்றுமுழுதும் என்மாமன் இருக்கும்திசையையும் நான்நோக்கவில்லை. நீண்டநேரம் என்னைக்காணுததால் என் மாமன் எழுந்து தள்ளாடித் தள்ளாடி என்னறை அடைந்தார். அடைந்தவர், என்னைப் பரிவுடன் நோக்கி, "அம்மா என்முன் என்றும் மலர்கின்ற உன்முகம் இன்று ஏன் குவிந்திருக்கின்றது. ஏன் இன்று உன்னைக் காணவில்லை. உன் மாமன் இழைத்த பிழையுளதேல் செல்வமே, பொறுத்தருள்வாய். நீயுமா என்னை மறந்தாய்" என மொழிந்து என்னருகு உட்கார்ந்து, முகம் வருடி மெல்லென அருமை பாராட்டினார். என் மாமனது அருளுரை என் கண்ணையே கரைக்கப் பெருகிய நீரினால் அவர் மார்பினை நனைத்தவளாய், "என் மாம, மறப்பனோ நின்னை. தந்தையும் தாயுமான பெரியோய்! உன்னடி தொழுகின்றேன். பிழையென்ப தென்னவென்றும் அறியாவுன் தூய மனம் என்பாற் பிழைக்கவும் வல்லதோ! என் மனத்தை உன்பால் செலவிட்டு உடலையே இங்கு இறுத்தியுள்ளேன். என்செய்வேன்; உனக்கு மனைவியாய்வந்த என் மாமி இட்ட விதியைக் கடக்க இயலாமல் என் மாமாவோ" என்று நான் புலம்ப, அவர் தன் மனைவியின் கொடிய இச்செயலுக்கு மிகவெகுண்டு, அவளை அழைத்து, "அடி பாபி, என் பாபத்தின் பயனுய் முளைத்த பேயே, என் இல்லத்தில் வருக்கவும் விதிக்கவும் உனக்கு உரிமை யார்கொடுத்தார். நீயும் அசோதையும் சேகரன் மனைவியும் சூழ்கின்ற உரிமைக்குப் பயிலிடம் வேறு தேடிக்கொள். மானத்திற்கு அஞ்சுகின்றேன்; இல்லையேல் எச்சில் இலைக்கு நீ அலைய நேரும்" என்றுதன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொண்டு என்னையும் உடன் அழைத்துச் சென்றார்.

இதுமுதல் என்மாமியின் தொல்லை யில்லாதுபோகவே, இடையூறு ஏதுமின்றி, மாமன் பணியில் ஈடுபட்டேன். நான் அவரிடம் இருப்பதால் அவர் மகளும் நன்மகனும் தம் தந்தையிருக்கு மிடத்தை நாடுவதுமில்லை. வாரம் இரண்டாயிற்று. காய்ச்சலும்சிறிது சிறிதாக அடங்கிவந்தது. எனினும் ஆகாரம்கொள்ளவில்லை. உடலும் நாளுக்கு நாள் இளைத்துப் போயது. மார்பில் கபமும் சேஷ்டை புரியத் துவக்கிற்று. குமுதத்தின் தந்தை அருமையுடன் சிகிச்சை செய்து வந்தார். இப்படி மாதம்இரண்டு சென்றன. சுரமோ முழுதும் நின்றபாடில்லை. அடிக்கடி காய்வதும் விடுவதுமாய் மாறிமாறிப்புரிந்தது அந்நோய். நானும் பள்ளிக்குப்போவதை நிறுத்திவிட்டு மாமனுக்குரிய பணிவிடைகள் ஆற்றிவந்தேன். கல்வியினால் ஆகும் பயன் இதுவன்றேல் கற்பதினின்று மாந்தரைக் கடவுளே காக்கவேண்டும்.

# யாப்பிலக்கணம்

[55-வது பக்கத் தொடர்ச்சி]

## தொடை

முன்னிதழில் அடிகளின் அமைப்பும் அவற்றின் வகையும் பற்றிக் கற்கவேண்டுவனவற்றைக் கவனித்தோம். இவ்விதழில் தொடைக்குரிய இலக்கணத்தைக் கவனிப்போம்: அடியிரண்டு தொடுத்து நிற்பது தொடை யெனப்படும். அத்தொடை, மோனைத் தொடை, இயைபுத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, அளபெடைத் தொடை என ஐவகைப்படும். இவற்றுள் இயைபுத் தொடை ஒழிந்த மற்றவைகள் அடிதோறும் முதற்சீரின்கண்ணும், இயைபுத்தொடை மட்டும் அடிதோறும் இறுதிச் சீரின்கண்ணும் அமைதற்குரியன. ஓரடியிலேயே அமைந்த சீர்களில் பொருந்தி வரும் மோனை முதலியவற்றைத் தொடை விகற்பம் என வழங்குவர். ஆதலின், மேற்கூறிய தொடை ஒவ்வொன்றும் எண் வகைப்படும். அவை பின் வருமாறு வழங்கப்படும்:

1. மோனை:—அடி மோனை, இணை மோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க் கதுவாய்மோனை, முற்று மோனை.

2. இயைபு:—அடி இயைபு, இணை இயைபு, பொழிப்பு இயைபு; ஒரூஉ இயைபு, கூழை இயைபு, மேற்கதுவாய் இயைபு, கீழ்க் கதுவாய் இயைபு, முற்று இயைபு.

3. எதுகை:—அடி எதுகை, இணை எதுகை, பொழிப்பு எதுகை, ஒரூஉ எதுகை, கூழை எதுகை, மேற்கதுவாய் எதுகை, கீழ்க் கதுவாய் எதுகை, முற்று எதுகை.

4. முரண்:—அடி முரண், இணை முரண், பொழிப்பு முரண், ஒரூஉ முரண், கூழை முரண், மேற்கதுவாய் முரண், கீழ்க் கதுவாய் முரண், முற்று முரண்.

5. அளபெடை:—அடி அளபெடை, இணை அளபெடை, பொழிப்பு அளபெடை, ஒரூஉ அளபெடை, கூழை அளபெடை, மேற்கதுவாய் அளபெடை, கீழ்க் கதுவாய் அளபெடை, முற்று அளபெடை.

இவையன்றி அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என மற்றும் மூன்று தொடைகளும் வழங்கும்.

இவற்றுள் அடியை நோக்கிய முதலைந்து தொடைகளையும் முறையே முதற்கண் கவனிப்போம்:

1. அடி மோனை:—அடிதோறும் முதற்சீரின்கண் உள்ள முதல் எழுத்து மாத்திரம் மாத்திரை வகையால் பொருந்திவரத் தொடுப்பது அடி மோனைத் தொடையாம்.

உ - ம்:—"மாம ரக்கிளை தம்மில் மகிழ்ந்துவாழ்
கோம ளக்குயி லேயிசை கூவுவாய்;
சாமி தந்த தனிக்குரல் காட்டினல்
தீமை யொன்றுள தோவினிச் செப்புவாய்.



"மன்னி யோங்கும் வசந்தமும் வந்தது;
மின்னி யெங்கும் மலர்கள் விரிந்தன;
இன்னி சைக்குயி லேயினிக் காட்டுவாய்
பொன்னி நாடுடை யார்புகழ் கீதமே."

(இச்செய்யுட்களில் முன்னதில் அடிதோறும் நெட்டெழுத்தும் பின்னதில் அடிதோறும் குற்றெழுத்தும் முதற்சீரின் முதலிற் பொருந்தி மோனைத் தொடையாயினமை காண்க.)

2. அடி இயைபு:—அடிதோறும் இறுதியில்நின்ற எழுத்தாலும் சொல்லாலும் பொருத்தமுறத்தொடுப்பது அடி இயைபுத் தொடை எனப்படும்.

உ - ம்:—"கோமுறை கோடாக் கொற்றவர்
ஏறே முறையேயோ
தாமரை யாள்வாழ் தண்கடி
மார்பா முறையேயோ
மாமதி வானேன் வழிவரு
மைந்தா முறையேயோ
தீமைசெய் தாய்போற் செங்கை
குறைத்தாய் முறையேயோ."

(இச்செய்யுளில் அடிதோறும் இறுதியில் எழுத்தாலும் சொல்லாலும் பொருத்தமுற்று அடியியைபுத் தொடை அமைந்தமை காண்க)

3. அடி எதுகை:— அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்துப் பொருந்தி வரத் தொடுப்பது அடி எதுகைத் தொடையாம்.

உ-ம்:-"சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விதேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.

(இச்செய்யுளில் அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்துப் பொருந்தியிருத்தல் காண்க.)

4. அடி முரண்:—அடிதோறும் முதலில் சொல்லாலும் பொருளாலும் மாறுபடத் தொடுப்பது அடி முரண் தொடை எனப்படும்.

உ - ம்:—"இருள்பரந் தன்ன மாநீர் மருங்கில்
நிலவுகுவித் தன்ன வெண்மணல் ஒருசிறை
இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னின் அன்ன நுண்டா திறைக்கும்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே"

(இச்செய்யுளில் இருள், நிலவு; இரும்பு, பொன்; சிறு, பெரு எனச் சொல்லாலும் பொருளாலும் முரண்தொடை அமைந்திருத்தல் காண்க.)

5. அடி அளபெடை:—அடிதோறும் முதலில் உயிரேனும் மெய்யேனும் அளபெடுத்து ஒன்றிவரத்தொடுப்பது அடியளபெடைத் தொடையாம்.

உ - ம்:—"ஆஅ அளிய அலவன்றன் பார்ப்பினோ(டு)
ஈஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுள்
தூஉம் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றேன்
மேஎ வலைப்பட்ட நம்போல் நறுநுதால்
ஓஒ உழக்குந் துயர்."

(இச்செய்யுளில் அடிதோறும் முதலில் உயிர் அளபெடுத்துப் பொருந்தி வரத் தொடுத்தமை காண்க.)

"அம்ம்ம் பவள்ள் அரிநெடுங்கண்; ஆய்வஞ்சிக்
கோம்ம் பவள்ள் கொடிமருங்குல்; கோங்கின்
அரும்ம் பவண்முலை ஒக்குமே; ஒக்கும்
கரும்ம் பவள்வாயிற் சொல்."

(இச்செய்யுளில் அடிதோறும் முதலில் மெய் அளபெடுத்துப் பொருந்திவரத் தொடுத்தமை காண்க. முதல் இரண்டடிகளிலும் இரண்டாஞ் சீரிலும் மெய் அளபெழுந்தது.)

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[51-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து 5-ம் தசகம்.
1-ம் பாசுரம்.

வீற்றிருந் தேழுலகுந் தனிக்கோல்
செல்ல வீவில்சீர்
ஆற்றல் மிக்காளு மம்மானை
வெம்மா பிளந்தான்றன்னைப்
போற்றி யென்றே கைகளாரத்
தொழுதுசொன் மாலைகள்
ஏற்ற நோற்றேற் கினியென்ன
குறையெழு மையுமே.

**அவதாரிகை:**—சென்ற தசகத்தில் விரகநோயின் வேகத்தால் நிரம்பத் துக்கப்பட்ட ஆழ்வார் இத் தசகத்தில் "இனி யென்ன குறை யெழுமையுமே" என்றும், "மேவி இன்பமிக வெல்லை எய்தினேன்" என்றும், "எனக்கு அரிய துண்டோ இன்றுதொட்டு மினி யொன்றுமே" என்றும் சந்தோஷ மிகுந்த உற்சாகம் கொண்டு பாடுதற்கு என்னநிமித்தமென்றால்—இப்பாசுரத்தில் அந்த நிமித்தத்தைக் குறிப்பாக உணர்த்துகின்றார். வைகுண்டநாதனை எம்பெருமான் இவர் படும் துயர்பாட்டிற்கு இரங்கித் தாம் பரமபதத்தில் செங்கோல் ஓச்சி நிற்கும் தரிசனத்தை இப்பெரியார் கண்ணால் காண்பதுபோல் நிதர்சனமாய்த் தோற்றுவிக்க இவர் களிப்படைகிறார் என்று தெரியவருகின்றது. ஆயினும் முன் சென்ற 3-ம் பத்து 10-ம் தசகத்தில்பாடியிருக்கிற பாசுரங்களைப்போலவே இந்தத்தசகத்திலும் பாசுரங்கள் காண்கின்றமையால் புனருத்தி தோஷம் அமையாதோ என்ன-அந்தத்தசகத்துக்கும் இந்தத் தசகத்துக்கும் நிரம்பவாசி உண்டு. அந்தத் தசகத்தில்தாம்பெற்ற கவிபாடுகையாகிற ஏற்றத்தைமாத்திரம் பேசினார். இத்தசகத்தல் மனதாலும் ஆவியாலும் சர்வ கரணங்களாலும் அவனை அநுபவிக்கும் பெரும்பேற்றைப் பேசுகின்றபடியால் புனருத்திதோஷம் ஏற்படவில்லை என்று கொள்ளவேண்டும்.

**குறிப்பு:**—வைகுண்டநாதன் பரமபதத்தில் தாம் வீற்றிருக்கும் ஸேவையை யுதிஷ்டிரருக்கும் கூட வியாஸபகவான் அருளால் காட்டினார் என்றால் ஆழ்வார்போன்ற அந்தரங்கமான பெரியாருக்குக் காண்பிக்க என்ன தடையுண்டு.

**உரை:**—வீற்று இருந்து - தம் உயர்வு நிலை எல்லாரும் அறியும்படி எங்கும் தன் ஆட்சி தோன்ற வீறு

பிக்கும்படி வைகுண்டத்தில் திவ்விய பரியங்கத்தில் உட்கார்ந்து, ஏழுலகும் - வைகுண்டத்திலும் மற்றுங் காணப்படுகின்ற எல்லாலோகங்களிலும் (அதாவது உபயவிபூதியிலும்), தனிக்கோல் செல்ல - தம் ஆஞ்ஞை உலாவ, வீவு-நாசம் என்பது, இல்-ஒருபோதும் இல்லாத, சீர் - ஞானசக்தியாதி குணங்களின், ஆற்றல் மிக்கு - சக்தியின் மிகுதியால், ஆளும் - "வன்சொல் லென்றும் மகிழாதே" என்ற நியாயத்தின்படி உலகங்களை இன்சொல்லும் க்ஷமையும் அபராத ஸஹித்துவமும் இனிது தோன்றக் காத்தளிக்கும், அம்மானை - ஸ்வாமியும், வெம் மா-கொடிய குதிரை ரூபமெடுத்த ராக்கதனை, பிளந்தான் தன்னை-வாயைப் பிளந்து கொன்றவனுமாகிய அவனை, போற்றிஎன்றே- போற்றி போற்றி என்று, கைகள்ஆரத் தொழுது சொன்மாலைகள் ஏற்றநோற்றேற்கு-கைகளால் வணங்கிப் பாடல்களால் துதிக்கவல்ல தவம்செய்த எனக்கு, இனி எழுமையும்-மறு ஏழுபிறப்பிலும் (அதாவது- எல்லாக்காலத்திலும்) என்ன குறை - என்ன குறை உண்டு. இத் தசகத்தினிறுதியில், பூமேலிருக்கும் மஹாலெட்சுமி, ஜன்மங்களை விளைவிக்கும் பாபங்களைத் தீர்ப்பாளென்று பல சுருதி சொல்லப்போகா நிற்க ஆழ்வாருக்கு ஏழு ஜன்மம் வர நியாயம் இல்லை ஆகையால், இன்று தொட்டு எக்காலத்திலும் குறையில்லையென்றே அர்த்தம்செய்வது உசிதம். அடுத்த பாசுரத்தில், தன்வினைகள் நசித்துப்போயினவென்றே இவர் கூறும்மொழிகளையும் கண்டுகொள்க.

---

2-ம் பாசுரம்.

மைய கண்ணாள் மலர்மே
 லுறைவா ளுறைமார்பினன்
செய்ய கோலத் தடங்கண்ணன்
 விண்ணோர் பெருமான்றன்னை
மொய்ய சொல்லா லிசைமாலைக
 ளேத்தி உள்ளப்பெற்றேன்
வெய்ய நோய்கள் முழுதும்
 வியன்ஞா லத்துவீயவே.

**உரை:**—பெரியபிராட்டியார் வாஸம் செய்யப்பெற்ற திருமார்பை உடையவனும் அவளது கலவையால் நேர்ந்த நிரவதிகப் பிரீதியாலே செய்ய கோலத் தடங்கண்ணனும், அமரர்களுக்குப் பிரபுவும்ஆனஎம் பெருமானை என்னுடைய சகல துக்கங்களும் பாபங்களும் இந்த ஜன்மத்திலேயே தக்கணமே நீங்க அழகிய சொற்களாலே யிசைமாலைகள் ஏத்தப்பெற்றேன்; எனக்கு இனி என்ன குறை.

3-ம் பாசுரம்.

வீவி லின்ப மிகவெல்லை
 நிகழ்ந்தநம் மச்சுதன்
வீவில் சீரன் மலர்க்கண்ணன்
 விண்ணோர் பெருமான்றன்னை
வீவில் கால மிசைமாலைக
 ளேத்தி மேவப்பெற்றேன்
வீவி லின்ப மிகவெல்லை
 நிகழ்ந்தனன் மேவியே.

**உரை:**—ஒருக்காலும் குறைவில்லாததும் அவதியில்லாததுமான ஆநந்தத்தில், உபநிடதத்தில்சொல்லியிருக்கின்றபடி, வர்த்தியாநின்றஆச்ரிதரை ஒருநாளும் கைவிடாதே கடைபிடித்து நிற்கும் கல்யாண குணங்களையுடையவனும், தாமரைமலர்போல் திருக்கண்களையுடையவனும், விண்ணோர் பெருமானும் ஆகிய அவனை முடிவில்லாத காலமெல்லாம் மாலைபோல் தொடுக்கப்பட்ட பாசுரங்களாலே துதிசெய்து கிட்டப்பெற்றேன். இப்படிக் கிட்டப்பெற்று ஆநந்தத்தின் பரமாவதியில் நான் ஸ்திரமாய் நின்று களிப்படைகிறேன்.

**விசேஷக் குறிப்புக்கள் I.** இப்பாட்டின் முதலடி, தைத்திரீய உபநிஷத்தில் ஆநந்தவல்லியில் ஓதியபடி பகவானது நிரவதிக நாசரஹிதமான நித்யாநந்தத்தை இலக்ஷிக்கின்றதென் றறிக.

II. ஸ்ரீமந் நாதமுனிகள் ஸம்பிரதாயத்தில் ஓராணொரு வழியில் வந்த அர்த்தத்தைக் கேட்டருளிய எம்பெருமானது உபதேசத்தாலே திருவாய்மொழியின் உண்மையான பொருளைக் கற்று அப்பியசித்த திருக்குருகைபிரான் பிள்ளான் இப் பாசுரத்துக்கு உரையிடுகையில்ஸ்ரீவைகுண்டநாதன் "தன்னைத்தான் அநுபவித்ததினாலே தனக்கு வந்த நிரவதிக ஆநந்தமும் தன்னைத் திருவாய்மொழிபாடுகையால் எனக்கு வந்த ஆநந்தமுமானால் இதில் ஆயிரத்திலொரு பங்குக்குப்போதுமோஅவனின் ஆநந்தமும்" என்கிறார். பாசுரத்தில் இரண்டு விதங்களான ஆநந்தமும் வரம் பற்றுக்கிடக்கின்றனவென்று மாத்திரம் ஓதப்படுகிறதறிக. இரண்டு இன்பமும் "மிக்கவெல்லை" யில் நிகழ்ந்தன என்றும் பாடம்உளது. இப்படியிருக்க, ஒருக்காலும்முன் உரைகாரர் சென்றவழி மறவாமல் உரையிடும்பிள்ளான் தாத்பரியத்துக்குக் கமகந்தானென்னவெனில்—ஸர்வம்வல்ல பகவானதுஆநந்தம் அவனினடங்கும் வன்மையால் சிறிது போலும்மே சிறிது போலும்மே; பெரியாரேனும் மானிடமாகையால் ஆழ்வாரின் இன்பம்அடக்கமாட்டாமையால் பெரிது போலும்மே பெரிதுபோலும்மே!

---

# தமிழ்ப் பாடம் 54.

## நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[45-வது பக்கத் தொடர்ச்சி]

**கூனிக்** குறுகிய உருவத்துடன் நளன், கார்க்கோடகன்உரைத்தபடி அயோத்திமாநகரத்திற்குவழிக் கொண்டான். போகின்ற வழியில் அவன் ஓர் கடற்கரையைச் சேர நேர்ந்தது. தமிழ்நூல்கள் நிலத்தை நாலு அல்லது ஐந்து திணைகளாகப் பிரித்து அவ்வவைகளுக்கு ஏற்றபடி சில பொருள்களும் செய்திகளும் [illegible] மாபென்று முன்னர்க் கூறியிருக்கின்றோம். குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்ற இந்தப் பாகுபாட்டையும், அந்தந்த நிலங்களுக்கமைந்த கருப்பொருள் உரிப்பொருள் முதலியவற்றின் தன்மையையும் இந்தஆண்டுஸ்ரீமான் T. K. கனகசபாபதி முதலியார் கலித்தொகைக்கு முன்னுரையாக முதலிதழில் எழுதிய கட்டுரைகளால் எளிதில் அறிந்துகொள்ளலாம். நெய்தல் என்பது கடலும் கடலைச்சார்ந்த இடமும் ஆம். பிரிந்து அகன்ற காதலர் பிரிவாற்றாமல் வருந்துகின்ற விஷயத்தைக் கவிகள் நெய்தல்நிலத்தில் வைத்துச் சொல்வது மரபு. அதற்கேற்றபடி, கடற்கரையைச் சேர்ந்த நளன் தமயந்தியை நினைத்து இரங்குவதைப் புகழேந்திப்புலவர் ஆறு செய்யுட்களில் சுருக்கமாகவும் மிக்கநயமாகவும் கூறுகின்றார்:—



---

நினைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையேமூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டாள்—பனிக்குருகு
தண்படா நீழற் றனிப்பேடை பார்த்திரவு
கண்படா வேலைக் கரை. 17.

**பதப்பிரிவு:**—நினைப்பு என்னும் காற்று அசைப்ப நெஞ்சு இடையே மூளும் கனல் புகைய வேகின்றான் கண்டான் பனி குருகு தண் படா நீழல் தனி பேடை பார்த்து இரவு கண்படா வேலை கரை.

**அன்வயம்:**—நினைப்பு என்னும் காற்று அசைப்ப நெஞ்சு இடையே மூளும் கனல் புகையவேகின்றான்-தண்படா நீழல் பனிக்குருகு தனிப்பேடை பார்த்து இரவு கண்படா வேலைக்கரை—கண்டான்.

பதவுரை.

நினைப்பு - (தமயந்தியைவிட்டுப் பிரிந்துபோகின்றான் என்னும்) நினைவு
என்னும் - ஆகிய
காற்று - காற்றானது
அசைப்ப - அடிப்பதால்
நெஞ்சு இடையே - தன் மனத்தில்
மூளும் - மண்டுகின்ற
கனல் - துக்கமாகிய நெருப்பு
புகைய - புகைவிட்டு எரிவதனால்
வேகின்றான்-மெய்புழுங்குகின்றவனாகியநளன்,
தண் - குளிர்ச்சி
படா - குறையாத
நீழல் - நிழலில்
பனி - குளிரால் நடுக்கமுடைய
குருகு - ஆண்கொக்கு
தனி - (தன்னுடைய) ஒப்பற்ற
பேடை - பெண்கொக்கை
பார்த்து - பார்த்தவண்ணமாய்
இரவு - இரவு முழுவதும்
கண்படா - தூங்காதிருக்கின்ற இடமாகிய
வேலை - சமுத்திரத்தின்
கரை - கரையை
கண்டான் - பார்த்தான்.

**விளக்கம்:**—நளன் கடற்கரையைக் கண்டான், என்பது இந்தச்செய்யுள் சொல்கின்ற விஷயம். எந்த நிலைமையிலிருந்த நளன், என்ன தன்மையதான கடற்கரையைக் கண்டனன் என்றதைக் குறிக்கும் அடைமொழிகளாய் மற்ற வார்த்தைகள் வந்திருக்கின்றன. தமயந்தியை விட்டுப் பிரிந்ததை நினைக்க நினைக்கத் துக்கம் என்னும் தீ மேன்மேலும் பற்றி எரிந்து வேகின்ற நளன்—என்பது முதலிரண்டு அடிகளின் கருத்து. ஆண் கொக்கானது தன் பக்கத்திலே அமர்ந்திருக்கும் பெண்கொக்கின் மீதிருக்கும் ஆசைமிகுதியால் தூங்குவதுமின்றி அதைப் பார்த்துக்கொண்டே இரவுமுழுவதும் கழித்திருக்கும் காதற்செய்தி நிகழும் இடமாம், அக் கடற்கரை. அவ்வாறு கொக்குக் கண்விழிப்பதை நளன் பார்த்தான் என்று இச்செய்யுள் கூறவில்லை. நளன் பார்த்த கடற்கரையின் இயற்கை அது என்றுதான் கூறுகின்றது. கொக்கின் இத்தகைய காதலை நினைக்கும்போது நளன் தமயந்தியைப் பிரிந்தகொடுமை பின்னும் அதிகப்படும்.

**குறிப்பு:**—வேகின்றான், என்பது வினையாலணையும் பெயர். அசைப்ப என்ற காரணப்பொருளில் வந்த வினையெச்சம், புகைய என்னும் மற்றொரு வினையெச்சத்தைக் கொண்டு முடிகின்றது. புகைய, என்பதும் காரணப்பொருளில்வந்த வினையெச்சம். அது வேகின்றான், என்னும் வினையாலணையும் பெயரைக் கொண்டு முடிகின்றது.

படா, படா, என்பன ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். ஈறு கெடாதிருந்தால் படாத என்றிருக்கும்.

நீழல், இரவு, என்னும் இரண்டு சொற்களும் ஏழாம்வேற்றுமைத் தொகைகள். விரிந்தால், நீழலில் இரவில் என்று ஆகும்.

---

கொம்ப ரிளங்குருகே கூறா திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலால்—தும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
உறக்கத்தே நீத்தேனுக் கொன்று. 18.

**பதப்பிரிவு:**—கொம்பர் இளம் குருகே கூறாது இருத்தி ஆல் அம்புயத்தின் போதை ஆறு காலால் தும்பி திறக்க தேன் ஊறும் திரு நாடன் பொன்னை உறக்கத்தே நீத்தேனுக்கு ஒன்று (ஆல், அசை).

பதவுரை.

கொம்பர் - கிளையில் இருக்கின்ற
இளம் - இளமை பொருந்திய
குருகே - கொக்கே,
அம்புயத்தின் - தாமரையின்
போதை - மலரை
தும்பி - வண்டுகள் தம்
அறு - ஆறு
காலால் - கால்களால்
திறக்க - கிண்டித் திறப்பதால்
தேன் - தேனானது
ஊறும் - சுரந்து பெருகும்
திரு - அழகிய
நாடன் - நாட்டையுடைய வீமராஜன்
பொன்னை - மகளை
உறக்கத்தே - நித்திரையில்
நீத்தேனுக்கு - விட்டுப் பிரிந்த எனக்கு
ஒன்று - ஒரு வார்த்தைகூட
கூறாது - உரைக்காமல்
இருத்தி - இருக்கின்றாய்.
(இது நியாயமா) என்று நளன் சொன்னான்.

**விரிவுரை:**—வருத்தமுற்றுத் தவிப்பவர்கள், தம்முடைய துயரை யாவரேனும் வினவி ஆறுதல் சொல்லாரோ வென்று ஏங்குவது இயற்கை. மரக்கிளையி லுட்கார்ந்திருந்தவொரு கொக்கை நோக்கினான் நளன். நோக்கி அதன் எதிரேபோய் நின்றான். அதுவோ இவனுடன் யாதும் பேசவில்லை. தன்னிலையைக் கண்டு பரிந்து ஒரு சொல் சொல்லாமலிருந்த அந்தக் கொக்கின் நெஞ்சு மிகவுங் கொடியதென வெறுத்து, "ஏ கொக்கே, விதர்ப்பராஜன் அருமைமகளைத் தூங்கும்

போது விட்டு வந்திருக்கின்ற எனக்கு நீ பரிவுமொழி யொன்றுங் கூருமல் இருக்கின்றுய்; இது தருமமா, நீயே எண்ணிப்பார்'' என்று கலங்கிய மனத்தினுல், பறவைகள் பேசாவென்பதையும் மறந்து, இவ்வாறு குறை கூறினன்.

குறிப்பு:—கொம்பர் இளம், என்பது கொம்பரில் இருக்கின்ற இளமையான, என விரியும். இல் என்னும் உருபும், இருக்கின்ற என்னும் பயனுந் தொக்கு இருப்பதால் இது ஏழாம்வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை.

குருகே, என்பது கூப்பிடுகின்ற பொருளில் வருவதால், எட்டாம் வேற்றுமை.

நீத்தேனுக்கு, தன்மை வினையாலணையும் பெயர், நான்காம் வேற்றுமை.

---

புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு [ள்கண்
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கும் - இன்னரு
டஞ்சினு னுவி யழிந்தா னறவுயிர்த்து
நெஞ்சினு லெல்லா நினைந்து.

**பதப்பிரிவு:**—புன்னை நறும் தாது கோதி பொறி வண்டு கன்னி பெடை உண்ண காத்து இருக்கும் இன் அருள் கண்டு அஞ்சினன் ஆவி அழிந்தான் அற உயிர்த்து நெஞ்சினுல் எல்லாம் நினைந்து.

**அன்வயம் :** — பொறிவண்டு புன்னைநறும்தாது கோதிக் கன்னிப்பெடை உண்ணக் காத்திருக்கும் இன் அருள்கண்டு, நெஞ்சினுல் எல்லாம் நினைந்து, அஞ்சினன்; அற உயிர்த்து ஆவி அழிந்தான்.

**பதவுரை.**

பொறி - புள்ளிகளையுடைய
வண்டு - ஆண் வண்டானது,
புன்னை - புன்னைமலரின்
நறும் - வாசனையமைந்த
தாது - மகரந்தத்தை
கோதி-கிண்டி (தான் உண்ணுமல் தன்னுடைய)
கன்னி - இளமையான
பெடை - பெண்வண்டு
உண்ண - உண்ணும்பொருட்டு
காத்து - காத்து
இருக்கும் - இருந்த (அதன்)
இன் - இனிய
அருள் - அன்பை
கண்டு - பார்த்து,
நெஞ்சினுல் - தன் மனதில்
எல்லாம் - (முன்நிகழ்ந்த) எல்லாம்
நினைந்து - எண்ணி
அஞ்சினன் - கூசினன். (கூசி)
அற - மிகுதியும்
உயிர்த்து - பெருமூச்சுவிட்டு
ஆவி - உயிர்
அழிந்தான் - சோர்ந்தான்.

**விரிவுரை:**—கொக்கோ தனக்கொன்றுங் கூறவில்லை என்று வெறுப்புற்றநளன் வேறோர்புறம் திரும்பி அங்கிருந்த வண்டுகளைப் பார்த்தான். பேசாத பழியொன்றே பறவையைச்சேர்ந்ததென்றுல் இவ்வண்டோ தன்னுடைய செய்கையால் நளனுடைய மனம் அழுங்கும்படி புரிந்தது. மகரந்தத்தைக்கோதிய ஆண்வண்டு தான் உண்ணுமல் தன் பெட்டைவண்டு உண்ணும்படி காத்திருக்கின்றதைக்காண, ''ஐயோ, அவ்வண்டினத்திற்கு இருக்கின்ற அன்புகூட இல்லாமல் நான் மனைவியை நடுக்காட்டில் நிசிப்போதில் தூங்குகையில் துறந்து வந்தேனே. அதுவும் எத்தகைய மனைவியை! இந்திரன் முதலாய தேவரையெல்லாம் வேண்டாது என்னை வேண்டி மாலையிட்டாளை! தந்தைநகர் செல்ல மறுத்து என்னேடு காட்டிற்கே வந்தாளை!!'' என்று இன்னவெல்லாம் நினைத்து நளன் வருந்தினன். இவ்விதம் ஒன்றைக்கண்டு மற்றென்றை நினைப்பதாகக் கூறுவதை நினைப்பு அணி என்பர்.

ஆண்வண்டு, பெண்வண்டு உண்ணக் காத்திருந்ததென்னுங்கருத்துத் தோலாமொழித்தேவர் பாடிய 'சூளாமணி' என்னும் நூலில் வந்திருக்கின்றது. அங்குச் சுரமை என்னும் நாட்டின் முல்லைநிலத்தை வருணிக்கும்போது அப்புலவர் பாடியவொரு செய்யுள் பின்வருமாறு:—

நக்க முல்லையு நாகிளங் கொன்றையும்
உக்க தாதடர் கொண்டொலி வண்டரு
எக்க ரீர்மணற் கிண்டி யிளம்பெடைப்
பக்க நோக்கும் பறவையொர் பாலெலாம்.

இச்செய்யுளின் பொருள்—''ஒரு பக்கமெல்லாம், சிரித்தனபோல் மலர்ந்த முல்லைமலர்களும் மிகவும் இளமையான கொன்றையும் சொரிந்த மகரந்தம் அடர்ந்து, அதனை உண்பதற்கு அடைந்த வண்டுகளின் ஒலி நீங்காத குளிர்ந்த மேடடைந்த மணலை, ஆண் வண்டு குடைந்து, தன் இளம் பெண்வண்டு முதலில் உண்ணுமாறு அழைத்தற்கு அது இருந்த பக்கத்தைப் பார்க்கும்,'' என்பது.

## இலக்கணம்.

மொழிக்கு முதற்காரணமா யிருக்கக்கூடிய ஒலி எழுத்து. தமிழ் எழுத்துக்களைப் பற்பல தன்மை நோக்கிப் பற்பல வகைகளாய்ப் பிரிப்பார்கள். அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ என்ற பன்னிரண்டு எழுத்துக்களும் உயிரெழுத்துக்கள். க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன் என்ற, மேலே புள்ளியிட்ட, பதினெட்டு எழுத்துக்களும் மெய்யெழுத்துக்கள். உயிரெழுத்துக்களில், அ இ உ எ ஒ என்ற ஐந்து எழுத்துக்களும் குறில்கள். இவைகளை விடச் சிறிது நீண்டு உச்சரிக்கவேண்டுமாகையால், ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ, என்னும் ஏழெழுத்துக்களும் நெடில்கள். மெய்யெழுத்துக்கள் எல்லாம் ஒரே அளவாகத்தான் உச்சரிக்கப்படும். ஆகையால் மெய்யெழுத்துக்களுள் குறில் நெடில் என்கின்ற பேதம் இல்லை. ஆனுல், உச்சரிக்கின்ற அழுத்தத்தில் வித்தியாசம் மெய்யெழுத்துக்களுக்குள்ளே இருக்கின்றது. க் ச் ட் த் ப் ற், என்ற ஆறு எழுத்துக்களையும் உச்சரிக்கும்போது அழுத்திச் சொல்லவேண்டியிருக்கின்றது; ஆகையால் அவைகளுக்கு வல்லினம் அல்லது வல்லெழுத்துக்கள் என்று பெயர். ங் ஞ் ண் ந் ம் ன் என்ற எழுத்துக்களை மெதுவாக உச்சரிக்கவேண்டும். ஆகையால் அந்த ஆறு எழுத்துக்களுக்கும் மெல்லினம் அல்லது மெல்லெழுத்துக்கள் என்று பெயர். மற்ற, ய் ர் ல் வ் ழ் ள், என்ற ஆறு எழுத்துக்களும் வல்லினம்போல் அவ்வளவு அழுத்தாமலும் மெல்லினத்தைப்போல் அவ்வளவு மெதுவாக அல்லாமலும் நடுத்தரமாக உச்சரிக்கப்படும். ஆகையால் இவைகளுக்கு இடையினம் அல்லது இடையெழுத்துக்கள் எனப் பெயர்.



உயிரெழுத்துக்களில் உச்சரிக்கின்ற நேரம் அல்லது அளவில் வித்தியாச மிருக்கின்றது; அழுத்துவதில் வித்தியாசமில்லை. மெய்யெழுத்துக்களை உச்சரிக்கும் நேரம் எல்லாவற்றிற்கும் ஒன்றுதான். ஆனுல் எப்படி அழுத்தி உச்சரிக்க வேண்டும் என்ற விதத்தில் மெய்யெழுத்துக்கள் வித்தியாசப்படும்.

ஃ என்பது உயிருமன்று, மெய்யுமன்று, அதற்கு ஆய்தவெழுத்து என்று பெயர்.

இனி, க கா கி கீ, கு கூ என்று வருவனபோல் ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களுங் கலந்து ஒலிக்கின்ற எழுத்துக்களுக்கு உயிர்மெய் எழுத்துக்கள் என்று பெயர். 18 × 12 = 216 உயிர்மெய் எழுத்துக்கள் இருக்கின்றன. க் + அ = க, என்று ஆகிறதே ஒழிய, அ + க் = க, என்றுஆகவில்லை. அதாவது மெய்யின்மேல்தான் உயிர் வந்து சேர்கின்றது. க என்று சொல்லும்போது அதில் க் என்னும் மெய்யெழுத்தின் ஒலியும் அ என்னும் உயிரெழுத்தின் ஒலியும் சேர்ந்து கலந்திருப்பதை உச்சரித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். அப்படிப் பார்க்கும்போது மெய்யெழுத்தின் சப்தமே முதலில் தொனிப்பதையும் அறிவீர்கள். ஆனுலும் இவைகளுக்கு, உயிர்மெய் என்று, முதலிலே உயிரைத்தான் சொல்லிப் பெயர்வைத்திருக்கிறுர்களே யொழிய மெய்யுயிரெழுத்து என்று அவைகளை அழைப்பதில்லை.

உயிர்மெய்யெழுத்துக்களில் உயிர் மெய் ஆகிய இரண்டும் இருப்பதால், உயிர்மெய்க் குறில்கள் ஐந்தும் உயிர்மெய் நெடில்கள் ஏழும் ஒவ்வொரு வரிசையிலுமாகப் பதினெட்டு வரிசையிலும் உண்டு. மெய்யெழுத்துக்களின் பிரிவின்படி ஆறு வரிசை வல்லின உயிர்மெய்யாகவும், ஆறுவரிசை மெல்லின உயிர்மெய்யாகவும், ஆறுவரிசை இடையின உயிர்மெய்யாகவும் இருக்கும்.

இனி எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டிய கால அளவிற்கு **மாத்திரை** என்று பெயர். ஒரு மாத்திரை என்பது, ஒருதரம் கைநொடிப்பது அல்லது கண் இமைப்பது செய்வதற்கு வேண்டிய நேரம். இப்படிப் பார்த்தால், க் ங் போன்ற மெய்யெழுத்துக்களை உச்சரிப்பதற்கு வேண்டியமாத்திரை அரைமாத்திரை; அதாவது ஒருதரம் கண்கொட்டுவதற்குள் அல்லது கையை நொடிப்பதற்குள் இரண்டு மெய்யெழுத்துக்களைச் சொல்லிவிடலாம். எந்த இனமாயிருந்தாலும் மெய்யெழுத்துப் பதினெட்டிற்கும் அரைமாத்திரைதான். உயிரில், குறிலுக்கு மாத்திரை ஒன்று. நெடிலிற்கு இரண்டு. உயிரெழுத்திற்கும் உயிர்மெய் எழுத்திற்கும் உச்சரிக்கும் அளவில் வித்தியாசமில்லை. அ, என்பது உயிர்க்குறில்; அதற்கு மாத்திரை, ஒன்று. ப என்பது உயிர்மெய்க் குறில்; அதற்கும் மாத்திரை ஒன்றேதான். ப் + அ என்று இரண்டும்சேர்ந்து ஆகியிருப்பதால் ப விற்கு ஒன்றரைமாத்திரை உண்டோ என்று எண்ணப்படாது. நெடிலும் அவ்வாறே உயிராயிருந்தாலும் உயிர்மெய்யாயிருந்தாலும் இரண்டே மாத்திரை பெறும்.

---

# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—30. வியாகரணம்

[49-வது பக்கத் தொடர்ச்சி]

### (iv) அப்பரும் தமிழ் நெடுங்கணக்கும் *

### (a) பவணந்தியின் பிறழ்ச்சி—ஆய்தவெழுத்து.

பவணந்தி முனிவர் நன்னூலில் ''மொழிமுதற் காரணமா மணுத்திரளொலி எழுத்தது முதல்சார்பென விருவகைத்தே'' எனத் தொகுத்துச் சுட்டிய சூத்திரத்தின், அவர் இரண்டாம்பாகத்தை வகுத்துக் காட்டினுரன்றி, முதற்பாகத்தை வகுத்துக்காட்டாது விட்டுவிட்டனர். மொழிமுதற்காரணமாகிய ஒலிவகைகளே, இயற்றமிழுக்கும் இசைத்தமிழுக்கும் அடிப்படையாகும். எழுத்து அவ்வொலியை நினைவிலெழுப்பும் ஒருவகைக் குறியாம். ஆதலால் எழுத்தின் பேதத்தை எடுத்துக்காட்டுமுன்னர் ஒலிபேதத்தைக் காட்டுவது இலக்கணத்திற்கு அவசியமானதொரு தொழிலாகும். அத்தொழிலைக் கைவிட்டதால் பவணந்தி, எழுத்தின் சார்புக்கும், கலப்புக்கும் உள்ள பேதம் மயங்கி, சார்பு ஒலி எழுத்துக்களையும் கலப்பொலி யெழுத்துக்களையும் ஒரே வகுப்பாய்ச் சார்பெழுத்தென்று, 60-ம் சூத்திரத்தில்,

''உயிர்மெய், ஆய்தம், உயிரளபு, ஒற்றளபு
அஃகிய இ, உ, ஐ ஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத்தாகும்'' என்றுர்.

தொல்காப்பியனுர் முதலிய பண்டைத் தமிழாசிரியர் அறிந்து (இரட்டுற) மொழிந்த உடல் உயிர்த் தத்துவ விலக்கணத்தை இச் சமண முனிவர் உணராமல் எழுத்தியல் வகுத்ததால் உண்டானதொருகுற்றமாகவே இது காணப்படுகின்றது. தொல்காப்பியனுர் இச்சந்தர்ப்பத்தில் கூறிய சூத்திரங்களை நோக்குக:—

''எழுத்தெனப் படுவ
அகர முத
னகர விறுவாய் முப்பஃ தென்ப
சார்ந்துவான் மரபின் மூன்றலங் கடையே''
''அவைதாங்
குற்றிய லிகரங் குற்றிய லுகர
மாய்த மென்ற
முப்பாற் புள்ளியு மெழுத்தோ ரன்ன''
(தொல்காப்பியம் எழுத்ததிகாரம் 1 & 2)

அதாவது, உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும் முதலெழுத்து அல்லது சிறப்பெழுத்தென்றும், குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்னும்மூன்றும் சார்பெழுத்தென்றும் நமது முன்னேர் கூறுவார். எழுத்தின்மூலகாரணம் ஒலியென்றுரைத்தபவணந்தி, அவ்வொலியின் தத்துவம் ஜீவ தத்துவமாதலால் (Biological), உயிரற்ற இயற்கைத் தத்துவ (Physical) வாய்பாட்டில் தமிழ் நெடுங்கணக்கைக்

---

* நெடுங்கணக்கு = Alphabet.

கைப்பற்றியது அடிப்படையிலே செய்த குற்றமாகும். அக்குற்றமே நன்னூல் எழுத்ததிகாரத்தை முரணான விதிகளைக் கோவையாக்கி மாணவர்களை மயங்கவைக்கின்றது.

இவ்வாறுநேர்ந்த மயக்கத்திற்கு, நச்சினார்க்கினியர் உரையிற்கோடலாய்க் கொண்ட கூற்றே * ஏதுவெனநாம் அநுமானிக்கலாகும். எழுத்துக்கள் ஒலியைப் பற்றியே நிற்குமாதலால், ஒலிகள் தனியொலி யென்றும், சார்பொலி யென்றும் இசையில் விளங்குவது போல், எழுத்துக்களும் முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் தொல்காப்பியனார் மேற்கண்ட இரண்டு சூத்திரங்களில் எடுத்துக் காட்டினார். இவற்றுடன் வேறே கொள்ள இடமில்லை. கலப்பொலிகள் புணரியலால் உயிர்மெய் அளபெடை முதலியவைகளாய்த் தோன்றும். இவற்றைச் சார்பெழுத் தென்பது இழுக்கு. தொல்காப்பியனார், எழுத்ததிகாரம் பிறப்பியலில், சார்பொலிகள் சார்ந்து வரினல்லது தமக்கெனும் ஒரு இயல்பு இல்லையென்று கூறுகின்றார்:—

"சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்து வெளிப்படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்.
சூத்திரம் - 101

ஆதலால், சார்பொலிகள், ஆய்தம், குற்றியலிகரம், குற்றியலுகரம் என்னும் மூன்றால் காட்டப்பட்டனவே. இம்மூன்றில் முதலாகிய ஆய்தம் தமிழ்மொழியில்இக்காலத்தில் கையாளப்படுதல் மிகவும் ஏகதேசமாம். அரபி பாஷையில் ஆய்தவொலியானது வல்லினக்ககரத்தின் ஓசையை முன்னின்று மாற்றப் பயன்படுவதை, அரபி நெடுங்கணக்கில் இரண்டு எழுத்துக்களில் காணலாம்; அவையாவன; (Khai as-used in the word khuda - God) ஒன்று; மற்றொன்று; (Ghie as used in the word Ghulam). இவை முறையே தெலுங்கில் மொழியும் خ غ என்னும் எழுத்துக்களின் முதலில் ஆய்தவெழுத்தை (ஃ) வைத்து உச்சரித்தலாகும். இவ்விரண்டு எழுத்துக்களின் தலையில் புள்ளி ஒன்று இருப்பதைக் கவனிக்கவும். இரண்டு புள்ளி பெறும் (Khaf) எழுத்து (as used in the word kassim) வேறுவகையான மாற்றலாகும். தமிழிலும் ஆய்தம் இவ்வாறு ஓசையை மாற்றச் சார்பொலியாய்த் திகழ்ந்ததென்பது வெளிப்படை.

திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில் ஆய்தவெழுத்தின் உபயோகம் அதிகமாய்க் காணப்படவில்லை. அவ்வாறு காணப்படும் இடங்களில் தொடர்மொழி மிகச் சிக்காய்ப் புலப்படுகின்றது:—

பாரிடஞ் சாடிய பல்லுயிர் வானம ரர்க்கருளி
காரடைந் தகடல் வாயுமிழ் நஞ்சமு தாகவுண்டா
னூரடைந் திவ்வுல கிற்பலி கொள்வது நாமறியோ
நீரடைந் தஃகரை நின்றநெய்த் தானத் திருந்தவனே.
திருநெய்த்தானம் - திருவிருத்தம் 1.

இது சில பிரதிகளில் "நீரடைந்த கரை" என்று காணப்படும். இந்த ஆய்தம் சந்தியிற்றோன்றியதென்பதற்கு * இடமில்லை. "ஆய்த நிலையலும் வரைநிலையின்றே, தகரம் வரூஉங் காலை யான" (தொல். எழு. 379) என்னும் சூத்திர உரையிற்கோடலாய் நுழைப்பதன்றி வேறு வகையிலில்லை. தமிழ்மொழி நெடுங்கணக்கின் எழுத்துப்போக்கில் ஆய்தமானது காட்டில் மான் உலவுவதுபோல் உலவும் என்பது முன்னோர் துணிவு. வரைநிலையில்லா இவ்வாய்தத்தின் தொழில் தமிழ் இலக்கணத்தில் ஒரு அரிய பெரிய ஆராய்ச்சிகளுக்கு இடமாம். அக்கு என்பது தேவாரத் திருமுறைகளில் பெரும்பாலும் உருத்திராக்கத்தையே குறிக்குமாயினும், கீழ்வரும் பாசுரங்கள், ஆய்த எழுத்தை மனதிலெண்ணிச் சம்பந்தரும் அப்பரும் பாடியனவாகக் காணப்படுகின்றன:—

அக்குலா மரையினர் திரையுலா
முடியினர் அடிக ளன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய
சதுரனார் கதிர்கொள் செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதரு
வண்டுபண் முரலுஞ் சோலைத்
திக்கெலாம் புகழுறுந் திருநெல்
வேலியுறை செல்வர் தாமே
சம்பந்தர்—திருநெல்வேலி—பண் - சாதார் 7.

அக்குலா மரையினன்கா ணடியார்க் கென்று
மாரமுதா யண்ணிக்கு மையாற் றன்காண்
கொக்குலாம் பீலியொடு கொன்றை மாலை
குளிர்மதியுங் கூரரவு நீருஞ் சென்னித் [லுந்
தொக்குலாஞ் சடையினன்காண் டொண்டர் செல்
தூநெறிகாண் வானவர்க டுதிசெய் தேத்துந்
திக்கெலா நிறைந்தபுகழ்த் திருவா ரூரிற்
றிருமூலட் டானத்தெஞ் செல்வன் றானே.
திருவாரூர் - திருத்தாண்டகம் 2.

ஆய்தவெழுத்தின் மகிமையை நம் முன்னோர் அறிந்து பயன்படுத்தினார். நாம் அதனை இப்போது முற்றும் மறந்தோம். "அஃகுதல்" என்பதற்குச் சுருங்கல், குறுகல் என்னும் பொருட்பிரயோகம் நமது இலக்கணங்களில் காணலாம். எனவே ஃ ஆகிய ஆய்தவொலி, தனியொலிகளின் சுபாவத்தை மாற்றும் சார்பொலியாய் நிற்கினல்லது தனக்கெனும் இயல்பில்லை. பாசமான மாயையானது பசுவைவிட்டு நீங்கியதாயின் தனக்கென்னும் உருவமும் சுபாவமும் பெறாததுபோல், ஆய்தம் குற்றியலுகரம் குற்றியலிகர மென்னும் சார்பொலிகள், ஆணவம் காமியம் மாயையென்னும் மும்மலங்கள் பாசத்திற் றிகழ்வதுபோல் தனியே நிற்கப் பெறா. இக்கருத்தை உள்ளேவைத்துத் தொல்காப்பியனார், "சார்ந்து வரினல்லது" என்னும் மேற்கண்ட சூத்திரவமைப்பில் காட்டுகின்றார்.

மற்றும் எழுபஃது, பஃறொடை, அஃறிணை முதலியதொடர்களில் மெய்த்திரிபே ஆய்தமாதலும் அது ஓசை மாற்றும் கருவியாய் நிற்றலுங் காண்க.

* "எழுத்து இனைத்தென்றலைத் தொகை வகை விரியான் உணர்க. முப்பத்து மூன்றென்பது தொகை. உயிர் பன்னிரண்டும் உடம்பு பதினெட்டுஞ் சார்பின் தோற்றம் மூன்றும் அதன்வகை. அளபெடையேழும் உயிர்மெய் இருநூற்றொருபத்தாறும் அவற்றொடு கூட்டி இருநூற்றைம்பத்தாறெனல் விரி" (தொல்காப்பிய உரை) சூத்திரம் 1.

[குறிப்பு:—நச்சினார்க்கினியர் விரிவுரை இவ்வாறு கூறுவதற்கு ஆதரவுயாதென்பது அவர் காட்டவில்லை. தொல்காப்பியனார் "முப்பஃதென்ப" என்று முன்னோர் கூற்றை குறிப்பிட்டார். நச்சினார்க்கினியர் தமது அபிப்பிராயத்தை விதியுடன் கலந்தாரென்பது வெளிப்படை]

* "தகரம் வருவழி யாய்த நிலையலும்
புகரின் றென்மனார் புலமை யோரே"
தொல் - புள்ளிமயங்கியல். 369.



# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[37-வது பக்கத் தொடர்ச்சி]

அறியாத் துறக்கமு மறிந்த நிரயமும்.

மென்பனி எரிந்ததென்று வேனிலைக் கொணர்வித்து வெதும்புகின்ற இராவணன்தன் எளிமையை நோக்கி, "இன்பமுந் துன்பந்தானும் உள்ளத்தோ டியைந்ததன்றே" எனத்தெருட்டுகின்ற இம்மொழிகள்,

—One who brings
A mind not to be changed by place or time
The mind is its own place, and in itself
Can make a Heaven of Hell, a Hell of Heaven.

என நெருப்பெரி நிரயமுற்ற முதுசாத்தான் (Satan) விளம்பிய சில வாசகங்களை நினைவுபடுத்துகின்றன. அருளே கடவுள் உருவாயின், அக்கடவுளின் படைப்பாகிய இவ்வுலகில், பாவமும் அதனால் விளையும் துயரமும் கடக்கரும் வலத்தொடு வந்திறுத்த இக்கொடுமை அவர் அருளுக்கு எவ்வாறு இயைந்ததாகும்என்னுமொரு மருட்கை, சிந்தனையாளர்களனைவரையும் என்ஞான்றும் பற்றிக்கொண்டு பீடித்திருக்கின்றது. இதற்குக் கிறிஸ்தவர் வேதம் கூறியிருக்கின்றவோர் அமைதியைத் தழுவி, ஆங்கிலப் பெருங்கவிகளில் ஒருவராய ஜான் மில்ட்டன் (John Milton) என்பவர், "மாநுடர்பால் கடவுள் நடத்தும் முறையின் நீதியைக் காட்டுகின்றேன்" என்னும் விளம்பரத்தோடு "சுவர்க்க நீக்கம்" (Paradise Lost) என்றோர் பெருங்காவியம் மூந்நூற்றாண்டுகளுக்குமுன் பாடினார். அந்தச் சரித்திரத்தை அறியாதார் மிகச் சிலர். நிகிலப்பொருள்களனைத்தையும் படைத்துக் கடவுள், ஆதாம் ஏவாள் என்னும் முதல் தந்தை தாயரையும் உண்டாக்கி, அவர்களைக் குறைவற வோர் இன்பவனத்திலே வாழவைத்துத் தான் வானுலகில் இணையில் பேராற்றலுடன் தனியரசு வீற்றிருக்கும் நாளில் வானவர்களில் முதன்மையாய ஒரு தேவன் கடவுளது தனிப்பெரும் மேன்மையைக் கண்டு அழுக்காறுற்று, அக்கடவுளைப் பொருதுவென்று தான் அப்பதவியைக் கைப்பற்றும் நசையுடையவனாகி, மற்றுஞ் சில வானவர்கள் மனங்களைக் கலைத்துக் கடவுளிற்கு மாறாகவோர் கட்சிசேர்த்துப் போர்தொடுக்க, இடியைப் படையாகவுடைய அக்கடவுள், ஒரு நொடியில் செருக்கிய இப்பகைவர்தம் வலியை முற்றுஞ் சிதைத்து அவர்களைப் பாதலத்தில் வீழ்த்திவிட்டார். காலைமுதல் நண்பகல்காறும், நண்பகல் முதல் மாலைவரையிலும் ஒருநாள் முழுவதும் அந்தரத்தே உருண்டு இறுதியில் உருக்கிய கந்தகத்தீயுடை நரகத்தில் வீழ்ந்த அதிர்ச்சியால் உணர்வழிந்து சிலகாலம்கிடந்த இத் தேவர்தலைவன், பிறகு ஒருவாறு களைதெளிந்தெழுந்து, தன்னுடன் விழுந்துகிடந்த மற்றவர்களையும் எழுப்பி, இருளும் எரியும் சூழ்ந்த அந்நிரயத்தின் ஓர்பாற் சென்று, தம்மை வென்றழித்த அக்கடவுளிற்கு இன்னும் இன்னல் என்ன செய்யலாம் என்பது பற்றித் தன் பரிவாரதேவதைகளுடன் சிந்திக்கப் புகுவானாகி,—

"இதுவோ தேயம், நிலமும் இருதுவும் இதுவோ! துறக்கத்திற்குமாறாக நாம் கொள்ளக் கிடைக்கும் இருக்கையும் இதுவோ!—அவ் விண்திகழ் தெய்வ ஒளிக்கெதிர் இம் மருளுடை இருளோ வாய்த்தது? ஆகுக! இப்போது தன் பேரரசாட்சி நிலைக்கப்பெற்ற அவன், தன் வன்மையால் நடத்தும் கட்டளை எதனையும் முறையேயென நிறுவக் கூடும். அறிவினால் அவனுக்கு இணையாயினோம்; ஆயினும், இவ்விணையினோர்தமைத் தன் வன்மையால் இகந்து உயர்ந்தனன். நெடுந்தூரம் இடைகிடக்க அவனின்று அகன்றிருத்தலே நன்று. ஓவாத உவகையேஎன்றும் உறைகின்ற இன்ப நிலங்களே, செல்க! இடருடைக் கொடியதுன்பங்காள், வருக! பாதல வுலகமே வருக! ஏ, அரு நரகமே, காலத்தால் இடத்தால் மாற்றுதற்காற்றா வொரு மனத்தினைக் கொணர்வேன் நின் புது உடைமையேனை ஏற்றுக்கொள்க. தனக்கிடம் தானேயா யுடையது மனம், தன்னிலே, துறக்கத்தை நிரயமாக்கவும், நிரயத்தைத் துறக்கமாக்கவும் வல்லது. என்றும் யான் மாறாத தன்மையனா யிருக்குங்காறும், எங்கிருந்தா லென்? இடியெனுமக் கொடிய படையினால் உயர்ந்த அவ் வொருவனுக்கே குறைந்ததல்லால் மற்றி யான் இருக்குமாறு இருக்க வேண்டாவோ? இவ்விடத்திலேனும் நாம் சுதந்தரமுடையவர்களா யிருப்போம். எல்லாம் வல்லோனவன் இதனை ஒருவர் அழுக்காற்றிற்குமிடமாய் அமைக்கவில்லை; இங்குநின்று நம்மைத் துரத்தமாட்டான்; இங்கு நாம் அச்சமின்றி ஆளலாம்; ஆட்சிசெய்ய, நரகத்திற்றானே யாயினும், ஆசைகொள்ளற் குரியதென்பது என் சிந்தனை: துறக்கத்தில் ஆட்செய்வதனினும் நரகத்தில் ஆட்சி புரிவதே நன்று"

எனத் துணிந்தனன். துணிந்து, ஆற்றலால் வெல்லலாகா அக்கடவுளின் படைப்பைச் சூதினால் கெடுத்துத் தன் வெஞ்சினத்தைத் தீர்த்துக்கொள்ளுங் கருத்தினனாய், ஏவாளிடம்சென்று, தின்னப்படாது என்று கடவுள் தடுத்திருந்த ஒரு கனியை அவள் அக்கட்டளைக்கு மாறாகத் தானுந் தின்று தன் நாயகனுக்குங் கொடுக்குமாறு வஞ்சனை வார்த்தைகளால் தூண்டி, கடவுளின் வெகுளியையும் சாபத்தையும் அன்னவர் தலைமீது கொணர்வித்து, அதனால் இவ்வுலகில் பாவமும் துயரமும் மரணமும் சூழ்ந்துகொள்ளும்படி செய்துமுடித்தான். இதனால், துறக்கமாய்த் துவக்கிய இவ்வுலகம் நரகத்திற்கு நிகராகத் தீர்ந்தது.

இன்பமுந்துன்பமும் உள்ளத்தோ டியைந்ததென்னும் உண்மையை ஓர்ந்து ஒழுகிய அந்தச் சாத்தானால் உலகம் அடைந்த கதி இது. இனி, இதனை ஓராது உழன்ற இராவணன் செய்தியைக் கருதுதல் அமையும். காமத்தால் கனன்ற உள்ளத்து இவ்வரக்கன், இடம்பெயர்ந்தும் தன்உடல் தாபம்தணியாமல் பின்னர்க் காலத்தைக் கலக்குபவ னாயினான். சிசிரம் நீங்கியது. வேனில்வர வெப்பமேஅதிகமாயது வியப்பன்று. ஆதலின்,

மாதிரத் திறுதி காறுந்
தன்மனத் தெழுந்த மையல்

வேதனை வெப்பஞ் செய்ய
வேனிலும் வெதுப்புங் காலை
யாதிதிங் கிதனின் முன்னைச்
சிசிரநன் றிதனை நீக்கிக்
கூதிராம் பருவந் தன்னைக்
கொணருதிர் விரைவி னென்றான்

[அவன்மனத்தில் எழுந்த காமநோயானது, திக்குக்களின் எல்லைவரையிலும் வெப்பம் செய்யும்படி, வேனிற்காலமும் எரிக்கத் தொடங்கியபொழுது, "இது வென்ன இது; முன் இருந்த பனிக்காலமே இதனிலும் நல்லதாயிருந்தது; இனி, இவ் வேனிற்காலத்தை நீக்கி, கூதிர்ப் பருவத்தை விரைவினிற் கொண்டுவாருங்கள்," என்றுகட்டளையிட்டான்]

அப்படியே, கூதிர் வந்தடைந்தது. மனத்தின்கண் தணியாத தீயிருக்கத் தண்ணிய கூதிர் என் செய்யும்!

கூதிர்வந் தடைந்த காலை
கொதித்தன குவவுத் திண்டோள்
சீதமுஞ் சுடுமோ முன்னைச்
சிசிரமே காணி தென்றான்
ஆதியா யஞ்சு மன்றே
யருளல தியற்ற வென்ன
யாதுமிங் கிருது வாகா
தியாவையு மகற்று மென்றான்

[கூதிர்ப்பருவம் வந்து சேர்ந்தபொழுது, திரண்ட வலிய அவன் தோள்கள் கொதிப்புற்றன. அதுகண்டு இராவணன் வெகுண்டு, "குளிர்ச்சிபொருந்திய கூதிர்ப்பருவமும்சுடுமோ. இதுவும் முன் இருந்த பனிக்காலந்தான்" என்றனன். அவ னேவலாட்கள், "தலைவனே, உன் கட்டளைக்கு மாறுகச் செய்ய நாங்கள் துணிவோமோ" எனப் பணிவுடன் விடைகூறினர். அதன்மேல் இராவணன், "இங்கு இப்பொழுது ஒரு பருவமும் வேண்டியதில்லை" எல்லாப் பருவங்களையும் அகற்றிவிடுங்கள்" என்றான்]

காலமே இல்லாமல் கழித்துவிடவல்ல பேராற்றல் இராவணனுக்கு இருந்தது வியப்பன்று. அவ்வாற்றலைச் செலுத்திக் காலமென்பதில்லா ஓர் நிலையைக் கருதத்துணிந்த இது, கம்பரல்லாக்கால், புதுமையே.

என்னனு மிருது வெல்லா
மேகின யாவுந் தத்தம்
பன்னரும் பருவஞ் செய்யா
யோகிபோற் பற்று நீத்த
பின்னரு முலக மெல்லாம்
பிணிமுதற் பாசம் வீசித்
துன்னருந் தவத்தி னெய்துந்
துறக்கம்போற் றேன்றிற் றன்றே

[என்று இராவணன் கட்டளையிட்டவுடன், இருதுக்கள் எல்லாம், சொல்லற்கரிய தத்தம் பருவத்தைச் செய்யாமல் யோகிகளைப்போல் உலகசம்பந்தத்தை விட்டுச் சென்றன. பின்னர், இவ்வுலகம் எல்லாம், அடைதற்கரிய தவத்தைச்செய்து, நோய் முதலிய பற்றுக்களை அறுத்து அடையப்படுகின்ற துறக்கத்தைப்போல் தோன்றியது]

செயலொன்றும் புரிவதின்றி யோகநிட்டையில் இருப்பவர்போல் பருவங்கள் சும்மா விருந்துவிடுதலும், இவ்வுலகம் துறக்கநாடேபோல் தோன்றும்படியாய இது இராவணன் இயற்றியவைகளால் விளைந்த இலாபம். பருவகாலங்களெல்லாம் பற்றுநீத் தகலவே பின் இவ்வுலக மனைத்தும் பிணிமுதற்பாசம் இன்றித் துறக்கத்தின் தோற்றத்தை எய்தலாயது, இன்பமுந் துன்பமும் உள்ளத்தோடியன்றவென்னும்செய்தியை ஓராமதியிலி இராவணன், காலத்தைக் குலைப்பதால் தன் காமவெந்நோயைத் தணிக்கலாம் என முயன்ற செய்கையால் நேர்ந்ததொன்று. கற்றனர் ஞானமின்றேல் காலத்தைக் கடக்கலாமல்லது காமத்தைக் கடக்கலாகாது. சீலமில்லாததால் இராவணன் சீதையை நச்சினன். சீலமும் அறிவுமின்றி ஆற்றல் மாத்திரம் உடைய ஒருவன் தன்னுடைய நன்மையைநாடிச் சில காரியங்கள் செய்யப்புகுங்கால், அக் காரியங்களின் விளைவாய், உலகங்கள் உயர்ந்து துறக்கமேபோல் சற்றே தோன்றுதற்கு (ஆவதற்கு அன்று) நேரலாம். அந்தக் காரியங்களும், இராவணன் இப்பொழுது காலத்தைத் தொலைத்தது போல், அளப்பரிய அதிசயமுடையவைகளாகலாம். மில்ட்டன் சித்தரித்த சாத்தானுக்குச் சீலமில்லை, எனினும்இன்பதுன்பங்களின் உண்மையறிவு இருந்தது. அறிவில்லாத் திறமையன் இராவணனால் விளைந்ததனினும், சீலமில்லாச் சாத்தானது அறிவினால் இவ்வுலகம் அடைந்த கொடுமை மிகப் பெரிது. பாவத்தையும் மரணத்தையுங் கொணர்ந்து இவ்வுலகை நிரயமேயாக்கினன் அத்தீயோன். சீலமொடு அறிவும் இல்லா ஆற்றலுக்கும், ஆற்றலொடு சீலமுமில்லா அறிவிற்கும் உள்ள வேற்றுமை இது.

இத்தகைய எண்ணங்களை எழுப்பித்தந்த கம்பர் பெருமான், இராவணனுக்குச் செவியறிவுறுத்துவார்போல்,

கூலத்தா ருலக மெல்லாங்
குளிர்ப்பொடு வெதுப்பு நீங்க
நீலத்தா ரரக்கன் மேனி
நெய்யின்றி யெரிந்த தன்றே
காலத்தால் வருவ தொன்றோ
காமத்தாற் கனலும் வெந்தீச்
சீலத்தா லவிவ தன்றிச்
செய்யத்தா னுவ துண்டோ

[கடற்கரையாற் சூழ்ந்த நிலவுலகம் முழுவதும், குளிர்ச்சி வெப்பம் இரண்டும் இன்றி நீங்கப்பெறவும், நீலோற்பல மலர்மாலையை அணிந்த இராவணனது உடல் நெய்விடாமலே நெருப்புப்போல் எரிந்தது. ஆதலால், காலத்தால் ஆவது ஏதேனும் உண்டோ! காமத்தினால் எரிகின்ற கொடிய தீயானது, சீலத்தினால் அவியுமேயல்லாமல் அதற்குச் செய்யக்கூடியதும் வேறு உளதோ]

எனக் காலந்தொலைந்த இச் செய்தியை முடிவிற்குக் கொண்டுவருகின்றனர். தனக்கேனும் பிறர்க்கேனும் நேர்கின்ற துன்பவகைகள் அத்தனைக்கும் காரணம் காமம் (ஆசை) அன்றி வேறொன்று மன்று. இத் துன்பந் தீர்வதற்கு, புறத்துளவற்றை எத்துணை மாற்றினும் பயனில்லை. அவரவர் சீலமே அனைத்து நன்மைக்கும் ஆதாரமாகும். சீலமுடைய இராகவன் சீதாபிராட்டியுடன் கடுஞ்சுரங் கடந்தபோது, இவர் வருகையால் - (அயோத்தியா காண்டம், வனம்புகு படலம், 4-வது வால்யூம், 742-வது பக்கம்).

குழுமி மேகங்கள் குமுறின குளிர்துளி கொணர்ந்த
முழுவில் வேடரு முனிவரின் முனிகில ருயிரைத்
தழுவி நின்றன பசியில பகையில தணிந்த
உழுவை யின்முலை மானிளங் கன்றுக ளுண்ட

[மேகங்கள் கூடிக் குளிர்ந்து நீர்த்துளிகளைச் சிந்தின. இளையாத வில்லுடைய வேடர்களும் உயிர்களைச் சினந்து கொல்லாமல் முனிவர்கள்போன்றவர் ஆயினர். உயிரோடு கூடிய பிராணிகளெல்லாம் பசியும் பகையும் இன்றி ஆறியிருந்தன. புலியின் முலைகளை மான்கன்றுகள் உண்டன]

பந்த ஞாட்புறு பாசறைப்
பொருள்வயிற் பருவந்
தந்த கேள்வரை யுயிருறத்
தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற்
கொதிப்பதக் கழலோன்
வந்த போதவர் மனமெனக்
குளிர்ந்ததவ் வனமே.

• [போர்க்களத்தில் கட்டிய பாசறைக்கும், பொருளீட்டுதல்பொருட்டும் புறப்பட்டுத் தாம் மீளுங்காலத்தைக் குறித்து அகல்கின்ற கணவரை உயிருறத் தழுவிப்பிரிந்த நறுமணமுடைய கூந்தலையுடைய மாதர்களது சிந்தையைப்போல் கொதித்திருந்த அந்தப் பாலைவனமானது, அக் கணவர் திரும்பியபோது இம்மாதர் மனம் குளிர்வதுபோல் இன்று குளிர்ந்தது]

கால மின்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்த
மூல மின்றியு முளைத்தன நிலனுற முழுதுங்
கோல மங்கைய ரொத்தன கொம்பர்க ளிம்பர்ச்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ

[காலமில்லா திருந்தும் கனிகள் பழுத்தன. பெரிய கிழங்குகள் வேர்கள் இல்லாமலிருந்தும் முளைத்தன. அந்த நிலம்முழுவதும் பூங்கிளைகள் அழகிய மாதர்களை ஒத்தன. இவ்வுலகத்தில் சீலம் அல்லாமல் செய்யத்தக்க தவம் வேறும் ஒன்று உளதோ]

எனக் கேட்குமளவில் வாழ்க்கையின் தத்துவமனைத்தும் திரண்டெழலாகின்றது. சீலமுடைமையால் தானும், தானேயன்றிப் பிறரும் இன்புற்று உய்ந்து உயர்ந்து நலம்பெற வல்லதாகும் என்னும் உண்மையைக் கம்பர்மொழிகளினின்று கற்றுணரமாட்டாத இழுதை யறிவானது நனி இரங்கற்பாலதே. சீலத்தோடு மற்றுஞ்சில வேண்டுமென்று மயங்கிய முயற்சியால் பாழாகாமல், தவமும் கருமம் சீலமேயன்றி வேறொன்றுமில்லை என்று ஈரிடத்தும் வற்புறுத்தும் நுண்மையை மறத்தலாகாது.

# காற்று மழை

\89137.

## Shakespeare—"The Tempest"

அங்கம் 1. களம் 2.

[52-வது பக்கத் தொடர்ச்சி]

ப்ராஸ்ப்பீரோ:—ஆம், மிராண்டா, அதிகமும் இருந்தனர் (1). மற்று, இது நின்மனத்தில் எவ்வாறுறைகின்றது? காலத்தின் பாதளத்துப் பின்னுள இருட்படாத் தகவயின் இன்னும் நீ என்னகாண்கின்றனை (2). இங்கு நீ வருவதற்குமுந்திய தேதேனும் உன் நினைவில் இருக்குமாயின், இங்கு எவ்வண்ணம் வந்தனை என்பதும் இருக்கலாமே. (3).

மிராண்டா:—மற்று, என்னு லது இயலவில்லை.

ப்ராஸ்ப்பீரோ:—பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர், மிராண்டா, பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர், நின் தந்தை மிலானுக்குத் தலைவனுகவும் ஆட்சியுடையவோர் அரசனுகவும் இருந்தனன்.

மிராண்டா:—ஐயா, என் தந்தை நீ அல்லையோ (4)?

ப்ராஸ்ப்பீரோ:—நினது அன்னை கற்புடைய வோர் உத்தமி. நீ என் மகளாவாயென்று அவள் கூறினுள் (5)...நின் தந்தை, மிலானுக்குத் தலைவன்; அன்னோன் உரிமைக்குக் குறைவறத் தனிப்பிறந்த வோர் கோமகள் நீயே. (6)

மிராண்டா:—ஓ தெய்வமே! அங்கிருந்து நாம் வருவதற்கு என்ன வஞ்சகம் எமக்கு வாய்த்தது (7)? அல்லது, நாம் வந்ததுவே நலமுடைய திருவருள் தானுயிற்றே (8)?

ப்ராஸ்ப்பீரோ:—இரண்டும், இரண்டுமாம், பெண்ணே; வஞ்சகத்தால், நீ யியம்புமாறு, அங்கிருந்து நாம் கிளப்பப்பெற்றோம்; மற்று, திருவருளினால் இவ்வயின் உதவப்பெற்றோம் (9).

மிராண்டா:—இப்பொழுது என் நினைவினின்று நீங்கிவிட்டதாயினும், அக்காலம் நானுனக்கு விளைத்த துன்பங்களை நினைக்க என்னிதயம் இரத்தம் வடிக்கின்றது! (10) தயைபுரிந்து, அதன்மேல். (11)

(1) மிராண்டாவை வளர்த்த செவிலித்தாயர் அக்காலத்தில் நாலைவரே யன்றி அதிகமும் இருந்தனர்—என்கின்றான்.

(2) பன்னிரண்டு வருடங்களுக்குமுன் நிகழ்ந்தவைகளைப் பற்றிக் கேட்பதால், 'காலத்தின் பாதளம்' எனக் கூறுகின்றான். அதன்பின் ஒருபடாம் (screen) இருப்பது போலவும், அந்தப் படாத்தின் மீது(அதாவது அவள் நினைவில்) இன்னும் என்ன உருவங்கள் வந்து இயங்குகின்றனவென்றும் கேட்கின்றான். அந்நினைவுமங்கியிருக்குமாகையால், 'இருட்படாம்' எனக் கூறுகின்றான்.

(3) இத்தத்தீவிற்கு வருவதற்கு முந்திய நிகழ்ச்சிகள் எவையேனும் உன் நினைவில் இருக்குமாயின், இங்கு நீ எவ்வாறு வரநேர்ந்தது என்பதுபற்றியும் உனக்கு நினைவிருக்கக் கூடுமே—என்பது பொருள்.

(4) ப்ராஸ்ப்பீரோ தன்னையே, "உன் தந்தை இருந்தான்" என்று படர்க்கையில் பேசியது ஓராமல் மயங்கிய மிராண்டா இவ்வண்ணம் வியந்து கேட்கின்றாள்.

(5) ப்ராஸ்ப்பீரோ தன் மகளதுபேதைமையைக்கண்டு விளையாட்டாய்ப் பரிகசிக்கின்றான். "உன் தாய் கற்புடையவள், நீ எனக்கு மகளாய்ப் பிறந்தாய் என்று கூறினாள். அதன்மேல் எனக்குத் தெரியாது; ஆயினும் அதனை நம்பவேண்டும்"—என்பது பொருள்.

(6) எனக்குப்பின் அரசிற்கு உரிமையுடையவளாய்ப் பிறந்த ஒரு மகள் நீ—என்பது பொருள்.

(7) யார் செய்த வஞ்சனையால் நாமிங்கு வரலாயினோம்—என்பது பொருள்.

(8) அல்லது, கடவுளின் கருணையால், நாமிங்கு வந்ததே நன்மையாயிற்றே—என்பது பொருள்.

(9) வஞ்சகர்கள் நம்மைக் கிளப்பிவிட்டார்களாயினும், திருவருளின் உதவியால் நாம் தீதின்றி இவ்விடம் வந்து அடைந்தோம்—என்பது பொருள்.

(10) என்னைக் காத்து வளர்க்க நீ எத்துணைத் துன்பங்கள் பட்டிருக்கவேண்டுமென்பதை நினைக்க நான் மிகவும் வருந்துகின்றேன்—என்பது பொருள்.

(11) அதன் மேல் நிகழ்ந்தவைகளைத் தயைபுரிந்துசொல்—என முடித்துக்கொள்ளவேண்டும்.

(12) முன்காலத்தில், இத்தாலி தேசம் பற்பல சிற்றரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இச் சிற்றரசர்கள் ஓர்

ப்ராஸ்ப்பீரோ:—என் தம்பி, நின் சிறியதந்தை, அன்ட்டோனியோ வென்பான்—இந்தா, உற்றுக்கேள்—உடன்பிறந்தோ னொருவன் இத்துணைத் துரோகியா யிருப்பதுவோ!—இவ் வுலகடங்கலும் உனக்கே அடுத்தபடி யான் நேசித்திருந்தவன்; என் அரசினதுஆட்சியை அவனிடம் வைத்தேன்; அக்காலம், எல்லாச் சிற்றரசுகளுடும் அதுவே முதன்மையானது; பெருமையின் புகழ்வாய்ந்து, வள்ளற்கலைகளில் தனக்கிணையிலாத ப்ராஸ்ப்பீரோ அவ்வரசர்களில் முதல்வன் (12); யான் கற்பதெல்லாம் அவைகளே ஆனபடியால், அரசினை என் தம்பியின்மீது சுமத்தி, இரகசியக் கல்வியில் ஆழ்ந்து மெய்ம்மறந்திருந்த நான் என் அரசிற்கோர் அயலான்போ லாயினேன்(13). நின் பொய்யுடைச் சிற்றப்பன் (14)—நான் சொல்வதைக் கேட்கின்றனையோ ?

மிராண்டா:—ஐய, மிகவும் கவனமாய். (15)

சக்ரவர்த்தியின் கீழ், தங்கள் இராச்சியங்களை ஆண்டுவந்தனர். அச்சிற்றரசுகளிலெல்லாம் மிகச்சிறந்ததுமிலான்; ப்ராஸ்ப்பீரோ சிற்றரசர்களுக்குள் முதன்மையாயிருந்தவன்.

வள்ளற் கலைகள்—வேண்டியவர்களுக்கு வேண்டியவைகளை வேண்டியபடி கொடுத்தலால், கலைகள், "வள்ளல்" என அழைக்கப்படுகின்றன.

(11) என் முழு கவனத்தையும் கல்வியிலேயே செலுத்தும்பொருட்டு இராஜகாரியங்களை எல்லாம் என் தம்பியே பார்க்கும்படி விட்டுவைத்தேன்; இராச்சியத்தில் என்ன நடக்கின்றது என்பதுகூட எனக்கு ஒன்றுந் தெரியாது—என்பது பொருள்.

(14) "அன்ட்டோனியோ வென்பான்"—என்று ஆரம்பித்ததை, "நின் பொய்யுடைச் சிற்றப்பன்" என்பதோடு தொடர்த்திக்கொள்ளவும். இடையில், மிலானைப்பற்றியும் தன்னைப்பற்றியும் சில கூறுகின்றான்.

(15) கவனமாய்க் கேட்கின்றேன்—என்று முடியும்.

# பொதிகை நிகண்டு

## (இரண்டாம் பகுதி)

[53-வது பக்கத் தொடர்ச்சி]

### ஆகார வருக்கம்.

181 ஆக மார்பு முடம்பு மாகும்.
182 ஆகார மூணும் வடிவு செய்யும்.
183 ஆகு கொப்புளும் பெருச்சாளியு மெலியும்.
184 ஆகுலந் துன்பமு மோசையு மாகும்.
185 ஆக்கஞ் செல்வமும் திருமகளு மாகும்.
186 ஆங்கசைச் சொல்லு மவ்விடமு மொப்பும்.
187 ஆசினி மரவுரியும் வயிரமும் விண்ணும்
மரமும் பலாவின் விசேடமு மாகும்.
188 ஆசுகம் பகழியுங் காற்று மாகும்.
189 ஆசிடை வாழ்த்துங் [1]கூட்டமு மாடையும்.
190 ஆசு கவியுங் கவசமு மற்பமும்
குற்றமுஞ் சடுதியுங் கரக்கருவியு மா[கு]ம்.
191 ஆசா ரம்பெரு மழையுஞ் சீலமு
மேட்டையும் புடவையும் விளம்ப லாகும்.
192 ஆசான் வியாழமுங் குருவு மாகும்.
193 ஆசை பொன்னுந் திசையும் அவாவும்
பரிவு மன்பும் வாமமு மாகும்.
194 ஆஞ்சி கூத்து மழுங்கலு மாகும்.
195 ஆடு வெற்றியுங் கூத்து மேடமும்
ஆடுங் கூர்மையு மானு மாகும்.
196 ஆடிகண் ணாடியோர் மாதமுங் காற்றும்
உத்திரா டமுமென உரைக்க லாகும்.
197 ஆடை தொங்கலு நோயுஞ் சீலையும்.
198 ஆடகந் துவரையும் பொன்னு மாகும்.
199 ஆடவர் புருடரு மாணிளைஞரு மாகும்.
200 ஆடல் புணர்ச்சியும் வெற்றியுஞ் சொல்லும்
கூத்துங் கவிதையுங் கூற லாகும்.
201 ஆணங் குழம்பு மன்பு மாகும்.
202 ஆணி யெழுத்தாணியு மற்றை யாணியும்
சயனமும் பேரழகுஞ் சாற்ற லாகும்.
203 ஆண்டா ருடையாருந் தேவரு மாகும்.

(பிரதி)—[1] கட்டமு.

204 ஆணு நன்மையு மிரதமு மாகும்.
205 ஆண்டவ் விடமும் வருடமும் புல்லும்
நெல்லு மெனவே நிகழ்த்த லாகும்.
206 ஆணை மெய்ப்பாடும் வெற்றியு மேவலும்
இலாஞ்சினையுஞ் சூளுந் தடுத்தலு மிசைப்பர்.
207 ஆதன் பேதையு முயிரு மாகும்.
208 ஆதவ ருக்கரும் வேதியரு மாகும்.
209 ஆதிமும் மூர்த்தியு [2]முதலு மொற்றியும்
நேரோடலு மருக்கனும் நிகழ்த்த லாகும்.
210 ஆதித்த ருக்கரும் அமரரு மாகும்.
211 ஆதல் கூத்து நூலு மாகும்.
212 ஆம்பல் வேயுங் கள்ளுங் கவ்வையும்
ஊது கொம்பு மியானையு மல்லியும்
ஓரெண் ணுமிசைக் குழலு மிந்துவும்
ஓர்பண் ணும்பே ரொலியு மாகும்.
213 ஆமிடைச் சொல்லு நீருமா மென்றலும்
சூத மரமுஞ் சொல்ல லாகும்.
214 ஆம்பிரந் தேமாவும் புளிமாவும் புளிப்பும்.
215 ஆம்பிகா ளானுஞ் சத்தமு மாகும்.
216 ஆமலகம் நெல்லியும் பளிங்கு மாகும்.
217 ஆயமா தாயமு மகளிர் கூட்டமும்
சூதுஞ் சுங்கமு நீளமுந் தோழியும்
மல்லரி யுமென வழுத்த லாகும்.
218 ஆயிர மோரெண் ணு மளவின் மையுமாம்.
219 ஆய்தல் தேர்தலும் நுணுக்கமு மாகும்.
220 ஆய்வு தெரிதலுந் துன்பமு மாகும்.
221 ஆரநித் திலமும் பதக்கமும் பூணும்
பித்தளையுஞ் சந்து மாத்திய மாலையும்.
222 ஆர்செறிவுங் கூர்மையும் ஆத்தியுஞ் சோதியும்
அவனியும் நிறைவும் பாகுந்தே ருருளும்.
223 ஆரல் செவ்வாயுங் கார்த்திகை நாளும்
மதிலும் ஆரல் மீனு மாகும்.

(பிரதி)—[2] முதலுமோர் தாளமுமொற்றியும்.



224 ஆரைபுற் பாயு மாரையு மெயிலும்.
225 ஆரியன் குருவுமோர் தேசமு மறிஞனும்
ஆதித் தனுமென வறைய லாகும்.
226 ஆர்வம் வில்லும் நிரையமுங் காதலும்
ஆர்ப்புதம் அமருமெனவே யறைந்தனர் புலவர்.
227 ஆர்தல் குடித்தலு மணிதலும் நிறைதலும்
உண்டலு மெனவே யுரைக்க லாகும்.
228 ஆர்கலி மழையுங் கடலு மாகும்.
229 ஆருபம் நீங்காமையு மமையா மையும்.
230 ஆர்வலன் கணவனும் நண்பனு மாகும்.
231 ஆர்மை மதிலுங் கூர்மையு மாகும்.
232 ஆரி கதவு மழகு மாகும்.
233 ஆர்ப்பரவம் போருந் தூளியு மாகும்.
234 ஆரியர் மிலேச்சரு மறிவுடை யோருமாம்.
235 ஆலம் விடமு மலர்ந்த பூவும்
மழையு நீரும் மழுவு மாலும்.
236 ஆலசைச் சொல்லும் புனலு மாலும்
ஆமென் பதுவு மல்லவென் பதுவும்.
237 ஆலி யாலாங் கட்டியு மழையும்
காற்று மறலுங் கழற லாகும்.
238 ஆலய மானைக் கூடமு நகரமும்
தேவ ராலயமுஞ் செப்ப லாகும்.
239 ஆல லாடலு மொலியு மாகும்.
240 ஆவல் வளைவு [3]மவாவு மாகும்.

(பிரதி)—[3] வழையு.

241 ஆவியா ருயிரு நாற்றமும் புகையும்
வாவியு மூச்சும் வழங்க லாகும்.
242 ஆவண மங்காடியு மடிமை யோலையும்
பீடிகையும் புணர்தமும் வீதியு முரிமையும்.
243 ஆவரணந் தூசும் பூணுந் தடையு
வானு மாசு மறையு மாகும்.
244 ஆவிய ருழவரும் வேடரு மாகும்.
245 ஆவம் நாளிகையு மம்புறு தூணியும்.
246 ஆழியோ திரமும் வட்டமுங் கடலும்
நேமிப் புள்ளும் தேராழியுங் கரையுஞ்
சக்கர [4]முமெனச் சாற்ற லாகும்.
247 ஆற்றல் சுமத்தலும் வென்றியு மாண்மையும்
கூட்டுதலும் விதித்தலும் மிகுதியும் வாய்மையும்
ஆற்றுதலும் பொறையும் ஞானமும் வலியும்.
248 ஆறே ரெண்ணும் வழியும் நதியும்.
249 ஆற்றுதலைக் கடையு யாற்றலு மாகும்.
250 ஆனியோர் மாதமுங் கேடும் மூலமும்.
251 ஆனே பசுவு மிடைச்சொல்லு மாகும்.
252 ஆனியம் பொழுதும் நாளு மாகும்.
253 ஆனகம் படகமுந் துந்துமியுந் தருவும்.
254 ஆவதி சயமு மிசையும் பசுவும்
வியங்கோ ளுங்கற் பகமு மிரக்கமும்.

(பிரதி)—[4] முழமெனச்.

ஆகாராதி முற்றும்.


எமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

திராவிடப் பிரகாசிகை

இந்நூல் தமிழின் மாட்சியையும் அதன் இலக்கண இலக்கியங்களின் விவரங்களையும், தமிழின் தெய்வப் பழமை மரபியல், ஒழிபியல் இலக்கண மரபியல், இலக்கிய மரபியல், என்னும் ஐம்பெரும் பகுதிகளால் நன்கு விளக்குவது. சமீபகாலத்திற் றோன்றிய "தென் மொழி வரலாறு," "தமிழ் வரலாறு" முதலிய புது நூல்களுக்கு வழிகாட்டியாயுள்ளது. தமிழ்ப்பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் நற்பயன் விளைக்கக் கூடியது. புத்தகசாலை, வாசக சாலைகளுக்கும் இன்றியமையாதது. இது, திருவாவடுதுறையாதீன மகாவித்துவானாய் விளங்கிய யாழ்ப்பாணத்து வடகோவை-சபாபதி நாவலரவர்களால் இயற்றப்பட்டது. இதன் இரண்டாம் பதிப்பு அழகுபெற டெம்மி எட்டுப்பக்கங்கொண்ட ருங பாரங்களாக நல்ல கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இப்பதிப்பின் விசேஷங்கள்:—தமிழ் ஆங்கில முன்னுரை, நூலாசிரியர் சரித்திரம், மேற்கோள் விளக்கம், கடினசந்தி நீக்கம், அச்சுப் பிழையின்மை முதலியன. வேண்டுவோர் கீழ்க்குறித்த விலாசங்களுக்கு எழுதவும்:— விலை ரு 3-8-0.

1 காரியதரிசி, மலைய சைவசித்தாந்த சங்கம், துவாலாலம்பூர்.

2 சோதிடவிலாச புத்தகசாலை, கோக்குவில் யாழ்ப்பாணம்.

3 சே. வே. ஜம்புலிங்கம் பிள்ளை, 20, காரணேசுரர்கோயில்தெரு, மயிலாப்பூர், சென்னை.

ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM c. c. s.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European. Professor S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

PRICE Rs. 5-8-0.

KALANILAYAM
Purasawalkam, Madras.

## கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:**—அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினால் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது, உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:**—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இனைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:**—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:**—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:**—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:**—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:**—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:**—உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:**—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அநுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:**—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:**—ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:**—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:**—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:**—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:**—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



# வர்த்தமானம்

வரிக்குப்பதில் நூல்:—அயோத்தி மன்னரின் ஆட்சியின்கீழுள்ள குடிகள் தாங்கள் அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டிய வரிக்குப்பதிலாக ராட்டணத்தில் நூற்கப்பெற்ற கதர் நூலைக் கொடுக்கலாம் என்று அவ்வரசாங்கத்தார் உத்திரவிட்டிருக்கின்றார்கள் என்று தெரிகின்றது.

***

பச்சையப்ப முதலியார் தினம்:—சமீபத்தில் கனம் முதன்மந்திரி பொப்பிலி ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற பச்சையப்ப முதலியார் தினக்கொண்டாட்டத்தில் ஸ்ரீமான் T.S. நடராஜ பிள்ளையவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவினிடையே—

"இக் கல்லூரியில் காலத்திற் கேற்றபடி கல்வித் திருத்தங்கள் செய்வதற்குப் பொருள் போதவில்லை. இக் கல்லூரி விஷயத்தில் அரசாங்கத்தார் சிரத்தையில்லாதிருக்கின்றனர். இக் கல்லூரியில் கைத்தொழில் வகுப்பு ஏற்படுத்த வேண்டுமென்று டிரஸ்டிகள் விரும்புகின்றனர். எனினும் போதிய பொருள் இல்லாமையால் எதுவொன்றும் செய்ய இயலாமற் போகின்றது. இக் கல்லூரிக்கு அரசாங்கத்தார் சிறிது தாராளமாகப் பொருளுதவி தரவேண்டும். பொது ஜனங்களும் உதவிதர முன்வர வேண்டும். கல்வி மந்திரியும் இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்." என்று கூறினார்.

இன்னபடி உபந்யாசகர் கூறத் தலைவர் இப்பொழுது அரசாங்கத்தின் பொருளாதார நிலை நன்றாயிருக்கவில்லை யாதலால் அரசாங்கத்தின் மீது பழி சுமத்தக் கூடாதென்றும், இது விஷயமாய்த் தாம் கல்விமந்திரியுடன் யோசிப்பதாயும் கூறினார்.

***

நீளாநாகினிதேவி:—நீளாநாகினி தேவி என்பவர் ஓர் அமெரிக்க மாது. இவர் சமீபத்தில் இந்து மதத்தில் சேர்ந்துகொண்டார். இவர் மைசூர் சர்வ கலாசாலை மாணவர் பலரை அழைத்துக்கொண்டு பங்களூர் மார்க்கட்டைச் சுத்தம் செய்தார். இவர்கள் சுத்தம் செய்வதுகண்டு கூடிய ஜனங்களுக்கு அவர் கூறியதாவது:— ஒவ்வொருவரும் தங்கள் ஊரைத் தாங்களே சுத்தம் செய்துகொள்ளவேண்டும். வேலையாட்களை எதிர்பார்க்கக் கூடாது. அவர்கள் சரியே சுத்தம்செய்யமாட்டார்கள். ஊர் சுத்தமாயிருப்பின் சுகாதாரம் விருத்தியாகும். மாந்தரை நோய் அணுகாது. சாலையைச் சுத்தம்செய்வது இழிந்த தொழில் இல்லை. மக்களின் நலத்திற்காகச் செய்யப்படும் எல்லாத் தொழிலும் நல்ல தொழிலே."

கலப்பு மணம்:—சென்னை அட்வகேட்டும் மாஜி அட்வகேட் ஜெனரலுமான ஸ்ரீமான் T. R. வெங்கட்டராம சாஸ்திரியாரது குமாரர் ஸ்ரீமான் T.V. இராமமூர்த்தி என்பவர், சென்னைச் சட்ட சபையின் மாஜி உபதலைவரான டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் தங்கையான ஸ்ரீமதி நல்லமுத்து அம்மாள் என்பவரை, சங்கராந்திப் பண்டிகையன்று ஆரியசமாஜ விதிப்படி மணந்துகொண்டனராம். அம்மாதிற்கு வயது 30ஆம்.

***

திருடன் திருந்தினன்:—இமயமலையில் ரிஷிகேசத்தில் தவம்புரியும் ஸ்ரீலஸ்ரீ சிவாநந்தர் எழுதுகின்றார்:- மனிதப்பெருமை மக்களிடம் பெருந்தகைமையையே வளர்க்கும். தண்டனையும் காவலும் மனிதச் சிறுமைகளை அகற்றிவைக்கும் தன்மையற்றவை. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் வாழ்ந்திருந்த சமயம் வங்காளத்தில் ஹரிபாபா என்று ஒருஞானியிருந்தார். அவர் வீட்டில் ஓரிரவு திருடன் ஒருவன் புகுந்து அங்குள்ள பாத்திரங்களை யெல்லாம் களவாடினான். அச்சமயம் விழித்துக்கொண்ட ஹரிபாபா, விஷயத்தைத் தெரிந்துகொண்டு, திருடனிடம் சென்று, அவன் பாதத்தில் வணங்கி—

"ஏ, கள்ள நாராயணா, நீ எனது குடிசையினுட் புகுந்தது எனக்குத் தெரியாது. ஏன் இப்படிக்கு நீ களவாடவேண்டும். என்னைக் கேட்டால் நான் கொடுக்கமாட்டேனா. இந்த மிகுதியாயுள்ள பாத்திரங்களையும் எடுத்துச் செல்" என்று எல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்தாராம். இச்செயலைக் கண்ட திருடன் வியந்து பின் அவர் பாதங்களில் விழுந்து தொழுது ஒன்றையும் எடுத்துக்கொள்ளாமல் சென்றான். அதுமுதல் அவன் அத்தொழிலையும் விட்டுவிட்டான்.

இன்னபடி ஸ்ரீசிவத்யானந்தர் கூறியிருக்கின்றார். காவலும் கூடமும் மனிதச்சிறுமைகளை வளர்க்குமேயல்லாமல், அவை எந்நன்மையையும் புரிந்து வைக்காவென்றும், சான்றோர் இருத்தலே மக்களின் வளர்ச்சி என்றும், எல்லோரும் சான்றோராய் ஆவதல்லால் வேறொன்றும் உலகத்தில் புரிவதற்கில்லை யென்றும் கலாநிலயமும் சென்ற 5 ஆண்டுகளாகக் கூறிவருகின்றது.

***

சேன்னைச் சட்ட சபை:—சென்னைச் சட்ட சபை ஜனவரி மாதம் 23-ந் தேதி கூடி அவ் வாரமுழுதும் நடைபெறும். என்று தெரிகின்றது.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்



| டானிக்குகள் : | | தைலங்கள்: | |
|---|---|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 | சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 | அமிர்தாமலக ,, | 0-12-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 | பிருங்காமலக ,, | 0-12-0 |
| குழந்தைகளுக்கு | | ஸ்திரீகளுக்கு | |
| ஸ்ரீகா கஸ்தூரி மாத்திரை | 0-4-0 | ஸூதக டானிக் | 2-0-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 | கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| பால ஸூதா (டானிக்) | 1-0-0 | ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும். ரிடட். ச்யாவனப்ராசா ரிடட். பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை "நஞ்சன்கூடுபல்பொடி" சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) ரிடட். மெடிகேடட் டப்பி தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ரிடட். ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

காஸ்ட்ராலகஸ்

ஜவரேக்

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

KALANILAYAM
Reg. No. M. 2324.


# — கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | „ | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | „ | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | „ | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | „ | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | „ | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— **கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.**


18913


தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம்,
சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில்
எங்கள் பிரசித்திபெற்ற

## ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

## கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதீ பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.

## பாரத வசனம்.

**ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.**

பாலவினோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS

covered by
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*


Printed at the B. N. Press. Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor).